# திராவிடநாடு




14. 1

## நன்னூல்

—[::]—

நாட்டினை, மக்கள் நெஞ்சின்
நலிவினை, அடிமை வாழ்வைத்
தீட்டிடும்; அறிவைத் தீட்டும்;
தேன்சுவை காதல், வீரம்
ஊட்டிடும்; நாட்டைக் காக்கும்;
ஒண்பொருள் பெருக்கும்; எந்த
ஈட்டியும் அரசும் நூலை
எதிர்த்துப்பின் மீண்டதில்லை!

*

அறியாத உலகிற் கெல்லாம்
அழைத்துப்போய், அறிய
வொண்ணா
நெறியெலாம் விளக்கி, மக்கள்
நினைப்பினில் புதுமை தேக்கிக்
குறிக்கோளில் வாழ்வில் ஏழ்மைக்
கொடுமையில் ஊக்கி, மேன்மை
நெறிசெலத் தூண்டும் தோழன்
நன்னூலாம்! நீடு வாழ்க!

—வாணிதாசன்.

14

10/7/55




தம்பி,

வடநாட்டு ஆதிக்க ஒழிப்புக்கான காரணங்களை நான் விளக்கி எழுதியதை, பண்புள்ள காங்கிரஸ் நண்பர்களுக்குப் படித்துக் காட்டியதாக எழுதியிருப்பது கண்டு, மகிழ்கிறேன். அவர்களிடம், நீ படித்துக் காட்டியபோது, நிச்சயமாக அவர்கள் பெருமூச்செறிந்திருப்பார்கள் — அவர்களால் இப்போதைக்கு வேறெதுவும் செய்யமுடியாது. இன்னமும் பண்டிதர் ஊட்டும் மயக்கம் வேலைசெய்கிறது, அவர்களாலே அவ்வளவு சுலபத்தில், எளிதாக அந்த மயக்கத்திலிருந்து விடுபடமுடியாது. மெள்ளமெள்ளத்தான் உண்மை அவர்கள் உள்ளத்திலே நுழையும். அதுவரையில் நமக்குத்தான் பொறுமை வேண்டும். நமக்கு நமது கொள்கையில் திடமான நம்பிக்கை இருக்கும்போது பயமென்ன, எப்படியும் இன்று மாற்று முகாமில் உள்ளவர்களிலேயே பலர், நம்மோடு சேரும் நாள் வரத்தான் போகிறது! உனக்கு நமது நண்பர், ஓயாது உழைக்கும் என். வி. நடராசன் தெரியுமல்லவா! அவரை என்னவென்று எண்ணிக் கொண்டாய்!! ஏ! அப்பா! அதி தீவிரக் காங்கிரஸ்காரராச்சே! சண்டமாருதச் சிங்கம் சத்தியமூர்த்தியின் பிரத்யேக பயிற்சிக் கூடத்தில் பல ஆண்டுக் காலம் இருந்தவர்! சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிலே உறுப்பினர் — எதிர்கால கார்ப்பரேஷன் மெம்பர் என்றும், ஒரு சான்சு அடித்தால் எம். எல் ஏ. ஆகலாம் என்றும் கூறி வந்தனர்— சென்னையில் எங்கு பார்த்தாலும் இந்த 'எலும்பு மனிதர்' காங்கிரசல்லாத கட்சிகளின்மீது கண்டனம் பொழிவார்! வசை மொழியால் என்னை அர்ச்சிப்பதில் அவருக்கு அப்போது அலாதி ஆசை!! நான் கார்ப்பரேஷன் தேர்தலில் ஈடுபட்டபோது என்னைத் தோற்கடிக்க, முழுமூச்சாக வேலைசெய்தவர். அப்போதெல்லாம், அவரிடம் 'நாலாம் தமிழ்' நடமாடும்! நாலாம் தமிழ் என்றால், தெரியவில்லையா, இயல், இசை, நாடகம்—முத்தமிழ்! வசை, நாலாம் தமிழ்!! என்ன அப்படி பிரத்யேகப் பெயரிட்டு அழைக்கவேண்டிய அளவுக்கு வசை இருந்தது, என்கிறாயா கேள், தம்பி; சொல்கிறேன்! நீ, எத்தனையோ விபூதி வில்வங்கள் ஏசிப் பேசக் கேட்டிருப்பாய், இதுபோலக் கேட்டதுண்டா சொல், பார்ப்போம்.

"நெஞ்சிலே இருக்கிற மஞ்சா சோறு வெளியே வரும்—ஆமாம்"

இதற்கு நாலாம் தமிழ் என்று தனிச் சிறப்பு அளிக்காமலிருக்கலாமா, சொல்லு.

பொருள் என்ன தெரியுமோ இதற்கு—ஒரு தாக்குத் தாக்கியதும் கிறுகிறு என்று தலைசுற்றி, வாந்தி எடுக்க வேண்டி நேரிடும்—அப்போது உண்ட சாதம் மஞ்சள் மஞ்சளாக வெளியே வரும்! இதுதான் பொருள்!

பேசினது—நம்ம நடராசன்! எனக்குத்தான் இந்த அர்ச்சனை! தேர்தல் காலம்! தேச பக்தி அவருக்குத் தலையில் ஏராளமாக! தூபம் போட சத்திய மூர்த்திகள், எனவே நாலாம் தமிழைத் தாராளமாகப் பொழிந்தார்; எனக்கு அவர் எப்படி அந்த நடையை இப்போது மறந்துவிட்டார் என்று கூடச் சில சமயங்களிலே ஆச்சரியமாக இருப்பதுண்டு.

நடை இது; உடை கதர்; படையும் உண்டு, மாலைக் கலகத்துக்கு ஆறணா, இரவுக் கலகத்துக்கு எட்டணா; நோடிசைக் கிழிக்க ஒரு ரூபாய்; சாணிவீச இரண்டணா; கனைத்துக் காட்ட ஒரு அணா; முண்டா தட்ட மூன்றணா; மூலை முடுக்கிலே நின்று வம்புச் சண்டை போட மூன்று ரூபாய், இப்படி 'ரேட்' பேசிக்கொண்டு பாரதமாதாவுக்குச் சேவை செய்யும் படை வீரர்கள் உண்டு! இத்தனைக்கும் எனக்கு அவர் அப்போதும் நண்பர்தான்! தொழிலாளர் இயக்கக் காரியத்தில் ஒன்றாகவே வேலைசெய்வோம். உன்னிடம் உண்மையைச் சொல்வதிலே தவறு என்ன, ஆங்கிலத்திலே ஏதாவது தொழிலாளர் சங்கத்துக்குக் கடிதம் வந்துவிட்டால், என்னிடம்தான் கொண்டுவந்து காட்டுவார்!! காலையில் இது—மாலை வந்தாலோ 'போலோ பாரத்மாதாக்கி' யாகி விடுவார்!

அப்படிப்பட்டவர் இன்று, எவ்வளவு அரும்பணியாற்றி வருகிறார், திராவிடர் இயக்கத்தில், என்பதைப் பார்க்கிறாயல்லவா!

கட்டாய இந்தியை நுழைத்தார் ஆச்சாரியார்;

இந்தி எதிர்ப்புப் போர் துவங்கிற்று! நாம் பதறாமல் பகை வளர்த்துக்கொள்ளாமல், தமிழ்ப் பண்பு கெடாமல், கொள்கை வழுவாமல், குறிக்கோள் மறவாமல், எதிர்ப்புக்கு அஞ்சாமல், பணியாற்றினோம் — காங்கிரஸ் வட்டாரத்திலேயே நமக்கு ஆதரவு அரும்பிற்று! நடராசன் போன்ற பல காங்கிரஸ் நண்பர்கள் நாங்களும் தமிழர்களே! எங்களுக்கும் தமிழார்வம் உண்டு! நாங்களும் இந்திக்கு அடிமையாக மாட்டோம் என்று பேசினார்—முதலில் நம்மவர்களைச் சந்திக்கும் போது—பிறகு தங்களுக்குள்ளேயே

(8-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14 ] 10—7—55 [ இதழ் 1

# ஆண்டு பதினான்கு

—o—

ஆண்டு பதினான்கு!—அகமகிழ்ச்சியுடன் தன்னாட்டவருக்குத் தெரிவித்துக் கொள்கிறது, 'திராவிடநாடு'

நோய் நொடிக்கு ஆளான குலக்கொடி, உண்ணக் கிடைப்பது கஞ்சியேயானாலும், சாய்ந்து படுப்பது ஓட்டைக்குடிலானாலும் பருவவயது அடைந்துவிட்டாள், மழலை மாறி தத்தைமொழி பெற்றுவிட்டாள், மணாளன் வந்து மாலை சூட்ட வேண்டியதுதான் பாக்கி என்றெண்ணும் பெற்றோர் மனம் பூரிப்பதுண்டல்லவா—அதுபோல, நாமும், களிப்படைகிறோம்.

பதினான்கு ஆண்டுகள் — இலட்சியம் ஒன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு நடைபோடும் ஏடுகள், வாழ்வதென்பது பெரிய பிரச்னை. அதிலும் ஏழைகளையும், இல்லாதவர்களையுமட்டுமே நம்பி, அவர்களைப் போன்றவர்களாலேயே நடத்தப்படும் ஏடுகளின் நிலையை எடுத்தெழுத வேண்டாம்—இந்நிலையில், 'திராவிட நாடு' எடுத்தடிவைக்கிறது, பதினான்காம் ஆண்டில்.

தாண்டிவந்துள்ள மேடுபள்ளங்களைவிட, அது சாதித்திருக்கும் காரியங்களை எண்ணிடும்போது, உருண்டோடி வருகிறது ஆனந்த வெள்ளம்! பதின்மூன்றாண்டுகளுக்கு முன்பு 'திராவிட நாடு' பிறந்து தவழத் துவங்கியபோது, நாடு இருந்த நிலைமையினையும், இப்போது நாடு இருக்கும் நிலைமையினையும் ஒப்பிட்டால், பெற்றிருக்கும் எழுச்சியும் உணர்ச்சியும் விளங்கும். இருண்ட காடு அன்று! பரவும் ஒளி, இன்று!! திராவிடரியக்கம், தென்னகத்து—ஏன்? உலகத்தின்—விடுதலை இயக்கங்களில் ஒன்றாகிவிட்டது. வாழ்வில், சுகதுக்கத்தில் நம்முடன் பங்குகொள்ளும் பெரியதோர் வாலிபப் படை நாடெங்கும்! நல்லவர் உள்ள இடமெங்கும்! கழகக் கொடி, எங்கும் கம்பீரமாகப் பறக்கிறது—அறிவியக்கம் வீரநடை போடுகிறது, மக்கள் மன்றத்தில். விடுதலைபுரியை அடையும் காலத்தை விரல்கொண்டு எண்ணுகின்ற நிலை! இந்த அரிய காட்சியினைப் பெற, இந்தப் பதின்மூன்றாண்டுகளில், 'திராவிடநாடு' தன்னாலான பணியினைச் செய்துள்ளது என்பதை நினைக்க, நெஞ்சம் குதூகலமடைகிறது.

இன எழுச்சி ஏடுகள், விடுதலை எண்ணங்களைத் தாங்கிவரும் தூதுவர்களாயிருக்கவேண்டும்! புதிய புதிய எண்ணங்களைப் படைக்கும் பெரும் பணியும், இன எழுச்சி ஏடுகளுக்கே உண்டு. அதே நேரத்தில், மாற்றாரை மனமருட்சிகொண்டு ஓட்டிடும் வகையில் உலவாமல், அவர்களையும் நமது அறப்போர்க்கூடம் நோக்கி வருமாறு செய்தல் வேண்டும். இந்த மாபெரும் பணியில், 'திராவிட நாடு' தன்னாலான அளவுக்குத் தொண்டாற்றியிருப்பதாக கழகம் காணும் புதுமுகங்கள் மூலம் உணர்கிறோம். அந்த உணர்வே, எமக்கு இன்பம்! பணி, பலனளிக்கிறது என்பதைக்காண்பதே திராவிட நாட்டின் குறிக்கோள்!! இந்த நன்னோக்கத்தைக் கொண்டுதான், ஏடு, நடைபோடத்துவங்கிற்று. நடுநடுவில் அதன் நடை தளர்ந்துவிடுமோ,—என்று நடுங்கக்கூடிய கட்டங்கள் பல ஏற்பட்டதுண்டு; யாவும் 'பணநாதன்' அருள் என்றிருக்கும் இச்சமூகத்தில், என்ன செய்ய முடியும் அஞ்சாமல்! எனினும், அந்த அச்சம் அதிக நாள் நீடிக்கவிடாது செய்து, துயரை உடனுக்குடன் துடைக்கும் வகையில் பேராதரவு காட்டிவருபவர்கள் ஆண்டுக்கு ரூபாய் ஏழு அனுப்பி, சந்தாதாரர்களான தோழர்கள் தான். அவர்களுக்கு, இந்த மகிழ்ச்சிகரமான நேரத்தில், நம்முடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு—இலட்சிய ஏடுகள் வாழவும் வளரவும் இதுபோல ஏராளமான ஆண்டுச் சந்தாக்கள் அதிகமாகச் சேர வேண்டும், அப்போதுதான் அச்சம் ஏற்படாமல் ஏடு நடைபோட இயலும், என்பதையும் அறிவித்துக்கொள்கிறோம்-ஆதரவு திரட்டும் பொறுப்பை ஒவ்வொரு சந்தாத் தோழர்களும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற அன்பு அறிவிப்புடன்.

ஏஜண்டுத் தோழர்களில் பலரும் 'பணநாதனால்' படாத பாடுபடுகிறார்கள் என்பது அறிவோம். ஆயினும் திராவிடநாடு விஷயத்தில் கடந்த ஆண்டுகளைவிட சென்ற ஆண்டில் அவர்கள் காட்டிய ஆர்வமும், பட்டியலை உடனுக்குடன் அனுப்பி உதவிய பெருந்தன்மையும் பாராட்டக் கூடியதாகும். இது, தொடர்ந்து வளரவேண்டும், வளர்வதே ஏடு வளமாகவரச் செய்யும் வழி என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாடு, புதிய நிலை பெற்றிருக்கும் நிலையில், ஏடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பும் செலவினமும் அதிகம். ஆயினும், என்றும்போல், புதிய எண்ணங்களைத் தாயகத்துக்குப் படைக்கத் தயங்காது, திராவிட நாடு. இந்தப் பணியில், ஒத்துழைக்க முன்வரும் எழுத்தாள நண்பர்களை, ஏடு வழக்கம் போல் வரவேற்கக் காத்திருக்கிறது. அந்த வரிசை, வளரவேண்டுமென்றும் விரும்புகிறோம்.

ஆண்டு பதினான்கு — எம்மைப் போல, பெருமிதம்கொள்ளும் ஏராளமான நண்பர்கள், நாடு முழுமையும் இருப்பார்கள். அந்த அண்ணன் தம்பிகளுக்கு எமது அன்பையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, புது ஆண்டில் எடுத்தடி வைக்கிறோம். வளர்க அறிவியக்கம்! வருக, திராவிட நாடு!!

★

## திருமணம்

திருத்துறைப்பூண்டியைச் சேர்ந்த வேளூரில் 21—6—55 அன்று காலை, 'திராவிட நாடு' துணை ஆசிரியர் தோழர் அரங்கண்ணலின் மைத்துனர்களான கோ. வெங்கட்டராமன்—யசோதா, கோ. சந்தானம்—செல்வமணி வாழ்க்கையொப்பந்தம் தோழர் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர்கள் கே. ஏ. மதியழகன், தில்லை. வில்லாளன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர். மாலையில் திருவிழிமிழலை சகோதரர்களின் நாதசுர கானமும், சீர்காழி கோவிந்தராஜனின் இன்னிசையும் நடைபெற்றது. புதுமணத் தம்பதிகளை, வாழ்த்துகிறோம்.

★

## யூநா

பர்மாப் பிரதமர், இங்குள்ள சில புடம்போட்டெடுத்த அரசியல் தங்கங்களின் அகராதிப்படி, 'எழுத்தால் பிழைக்கும், பேர்வழி! ஏனெனில், அவர் நல்ல நல்ல நாடக நூற்கள் எழுதி இருக்கிறாராம்—கதைப் புத்தகங்களையும் எழுதியிருக்கிறாராம்! வேறு மொழிகளிலுள்ள நூற்களையும் பர்மிய மொழியில் எடுத்தெழுதினாராம். இப்படி எழுதுவது குற்றம்; அழகாக எழுதுவது பெருங்குற்றம்; சுவைபட எழுதுவது சகிக்க முடியாத குற்றம்; மக்கள் வரவேற்கும்படி எழுதுவதும் மன்னிக்க முடியாத குற்றம் என்று குறைகூறிடும் குணாளர்கள் இங்கு உளர்! ஒரு எழுத்தாளர், நாடக ஆசிரியர், பர்மாவில் பிரதமராகவும் இருக்கிறார். அதற்காக அவர் மீது பாய்ந்திடும் வீரர் அங்குயாரும் இல்லை!

# மக்கள் கரமும் மன்னன் சிரமும்



கிராம்வெல்.



சார்லஸ்.

**சி.என்.அண்ணுதுரை.**

**மாமன்றத்தைக்** கலைந்து செல்லும்படி மன்னன் உத்திரவிட்டான பிறகு, மாமன்றத்தில் கூடிப் பேசியது கலாம் விளைப்பதாகும்—எனவே, எலியட்டும், கண்டனம் தெரிவித்த மற்ற உறுப்பினர்களும் குற்றவாளிகள், என்று மன்னன் சார்பில் வாதாடப்பட்டது. எலியட்டும் மற்றவரும், ஜாமீனில் செல்லக்கூட மறுத்து, மாமன்றத்திலே நடைபெற்ற விஷயத்துக்காகத் தங்கள்மீது வழக்குத் தொடருவது சட்ட விரோதம் என்று வாதாடினர். பன்னிரண்டுநீதிபதிகள்! ஏன் இந்த பதவியில் அமர்ந்தோம் என்று எண்ணிக் கவலைப்பட்டனர். ஒருபுறத்திலே மன்னன் உருட்டி மிரட்டிப் பார்க்கிருன். மற்ருேர் புறத்திலேயோ, மாமன்றம் முழக்கமிடுகிறது! இந்த வழக்கிலே, எந்த பக்கம் தீர்ப்பளித்தாலும், தொல்லை தாக்கும்! எனவே நீதிபதிகள் குழப்பமடைந்தனர். மன்னன் எந்த அளவுக்குச் செல்லத் துணிந்திருக்கிருன் என்பதை எடுத்துக் காட்ட விரும்பி, வழவழவென்றுபேசிய தலைமை நீதிபதி வேலையினின்றும் நீக்கப்பட்டான்! நீதி கண்டறிய அல்ல, மன்னன் நினைப்பு அறிந்து நடப்பதற்கே நீதிமன்றம்! கேலிப்பொருள்!! எலியட்டும் பிறரும் தண்டிக்கப்பட்டனர். சிறையில் தள்ளப்பட்டனர். நீதிக்காகவும் நேர்மைக்காகவும், மக்கள் உரிமைக்காகவும், மாமன்றத்தின் மாண்புக்காகவும் போரிட்டவர்களைச் சிறையிலே தள்ளினுன்—மக்களைச் சோகக் கடலிலே தள்ளிவிட்டான்! ஒரு எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து நின்று, நமக்காக வாதாடும் நேர்மை உள்ளம் பெற்றவர்களை, கொடுஞ் சிறையிலே தள்ளிவிட்டானே மன்னன். முறைப்படி நடக்கவேண்டும், நெறி அறிந்து ஒழுகவேண்டும், என்று பேசியதா குற்றம்! மக்கள் சார்பாகப் பேசுவதற்கா, கடும் தண்டனை. எலியட் செய்த குற்றம் என்ன? பொதுப் பணத்தைச் சூறையாடினுனு! போகபோக்கியத்தில் மூழ்கினுனு! பக்கிங்காமா? உற்ருர் உறவினர்களுக்கு வேலை வாங்கித் தந்தானு! தனக்காகவா பணியாற்றினுன்? மக்களுக்காக அல்லவா! கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து பெரும் பொருள் கைக்கூலி பெற்றுக்கொண்ட பக்கிங்காம், அரச சபையின் மணியானுன்! அக்ரமம் தாங்காமல், யாரோ ஒருவன் அவனைக் கொன்றுதீர்த்தான்—மன்னன் அவனை உற்ற தோழனுக அல்லவா கொண்டிருந்தான்! நமக்காகப் பாடுபடும் பிம், ஹாம்டன், எலியட் போன்ருருக்குச் சிறை! என்ன அக்ரமம்! எவ்வளவு அநீதி! என்று மக்கள் கொதித்துப் பேசினர், துயருற்றனர். சிறையில் தள்ளப்பட்டால், சித்தம் குழம்பிவிடுமா, கொண்ட கொள்கையை விட்டுக் கொடுத்துவிடுவேனு, அறப்போர் நடாத்த முடியும், அஞ்சேன், அஞ்சேல்! என்று எலியட் கூறிவிட்டுச் சிறையில் வாடிக் கிடந்தான். மக்கள் மனதிலே இடம் பெற்றுவிட்ட எலியட், சிறையிலேயே இறந்துபட்டான்—கொள்கைக்காக உயிரை இழந்த அந்த உத்தமனுடைய மறைவு, மக்கள் உள்ளத்தை உலுக்கிவிட்டது. இரண்டாண்டுக் காலம் சிறைக்கொடுமைக்காளாகி, எலியட் 1631ல் சிறையிலேயே இறந்துபட்டான்.

நச்சுத்தத்துவம், நச்சரவுபோன்ற நண்பர்குழாம், நாடு ஏற்க மறுக்கும் மார்க்க மாறுதல்கள், வீண் குழப்பமளிக்கும் திட்டங்கள், கேவலத் தோல்விகளைத் தரும் சண்டை சச்சரவுகள், பணவிரயம், மிரட்டி நீதிமன்றங்களை ஒதுக்குவது, மாமன்றத்தை ஆள்காட்டி விரலால் ஆட்டிப்படைக்க எண்ணுவது, உரிமை கேட்பவர்களைச் சிறையில் தள்ளி சாகடிப்பது, கொள்ளை அடிப்பதுபோல வரிகளைக்கொண்டு கொடுமை செய்வது, ஒன்று இரண்டா மன்னன் செய்யும் கொடுமைகள், எத்தனை காலத்துக்கு இதனைத் தாங்கிக் கொள்வது, எப்படித் தாங்கிக்கொள்வது, ஏன் தாங்கிக் கொள்வது? என்று மக்கள் மனம் நொந்து கேட்டனர். மன்னனே, மக்களை எப்படி ஆளவேண்டும் என்பது எனக்கல்லவா, தெரியும், மாமன்றம் அறியுமா அந்தத் திறமையை, ஆண்டவன் எனக்கல்லவா, ஆளும் உரிமையை, வரத்தை, அருளியிருக்கிருர்! என்று கேட்டான். புண்ணைக் காட்டினர் மக்கள், மன்னன் அதிலே வேல் சொருகினுன்.

பதினேராண்டுகள், சார்லஸ், மாமன்றத்தைக் கூட்டாமலேயே ஆண்டான். மக்களின் கருத்து அறிய மாமன்றம். மக்களின் உரிமையைக் கண்டறிய மாமன்றம்! தவறும் மன்னனைத் திருத்த மாமன்றம்! இது நாடு கொண்டிருந்த கருத்து. மன்னனே, "மாமன்றம்! அது இல்லாமல் ஆட்சி நடத்த முடியாமலா போகிறது, பார்ப்போம்" என்று சூளுரைத்தவன் போலானுன்—சுகபோகிகள் அவனைப் புகழ்ந்தனர்—ஆதிக்கம் புரியும் நோக்கம் கொண்டவர்கள்; அடுத்துக் கெடுப்பவர்கள், மக்களை மாக்களென்று எண்ணும் மமதையாளர்கள், ஏழையின் கண்ணீரையும் எளியோரின் இரத்தத்தையும் கண்டு மனம் இளகாத கொடுமையாளர்கள், மன்னனுக்குப் பக்கமேளம் கொட்டினர், பதினேராண்டுக்காலம் ராச நர்த்தனம் நடைபெற்றது. சிறையின் பசி தீருமளவுக்கு உணவு தரப்பட்டது! ஏன் என்று கேட்பவன், இழுத்துத் தள்ளப்படுவான்! பதினேராண்டுகள், மன்னன் தன் பரிவாரத்தின் துணைகொண்டு, நாடாண்டான்-மாமன்றம் அழைக்கப்படவில்லை, மக்களைக் கவனிக்கவில்லை. கேட்கும் வரியைத் தரவேண்டும். காட்டும் சிறையில் புக வேண்டும்! மன்னன் கூறுவதுதான் சட்டம், அவன் கொடுப்பதுதான் நீதி! உரிமை, சாசனம், உடன்படிக்கை, ஏற்பாடு-யாவும் வெற்றுரைகள்! வீணரின் கற்பனைகள்! அரசன் ஆண்டவன் அம்சம்! அவனை எதிர்ப்

பது நாத்தீகம்!! இந்த முறையிலே, பதினோராண்டுகள், சென்றன!

மக்கள் இந்த நாட்களிலே பெரும் புரட்சி எதும் செய்யவில்லை, அரசனைத் தாக்க முயற்சிக்கவில்லை, அரண் மனையைத் தாக்கக் கிளம்பவில்லை, அதிகாரிகளை அடித்துக் கொல்லவில்லை, மாளிகைகள் மீது போர் தொடுக்கவில்லை! எனவே, மக்கள் அடங்கிக்கிடக்கிறார்கள் என்று ஆதிக்க வெறி கொண்ட அதிகாரிகள் கருதினர், மன்னனோ, "இதுதான் மக்கள் இயல்பு! மன்னன் ஆள்வதைத்தான் அவர்கள் விரும்புவர். அவர்களுக்குத் தெரியும், மன்னன் என்றால் அதற்கு உள்ள மகிமை, மாமன்றம்தான் மக்க ளிடம் மயக்கமொழி பேசிக் கெடுத்து வந்தது, இப்போது மாமன்றம் இல்லை, எனவே மக்கள் மனதிலே தவறான கருத்துகள் தோன்றுவதுமில்லை" என்று எண்ணிக் கொண்டான். பெரும் புயலுக்கு முன்பு காணப்படும் அமைதி இது, என்று எண்ணத் தோன்றவில்லை. குறி களைக் கண்டு குணத்தை அறிந்து கொள்ளும் திறன் இல்லை, பதினோராண்டுகள், மாமன்றம் இன்றி, மன்னன் ஆண்டான், ஆனால் மாமன்றம் மாண்டுபோகவில்லை, மக்கள் மனதிலே இருந்துவந்த உரிமை வேட்கை மடிந்து விடவில்லை, மாறாக, அந்த வேட்கை, அடக்க அடக்க வலுத்தது.

பக்கிங்காம் இறந்ததால் ஏற்பட்ட 'காலி'யைப் பூர்த்தி செய்ய பிரபுக்கள் சிலர் கிடைத்தனர், அவர்களின் முகமன் சார்லசுக்கு இனிப்பளித்தது. நிர்வாக காரியத் துக்கு, இருவர் கிடைத்தனர்—ஒருவர் மார்க்கத் துறைக் கும் மற்றொருவர் ஆட்சித் துறைக்கும், இரு துறைகளில் புகுந்த அவ்விருவரும். மக்களை வேட்டையாடுவதைக் கலையாக்கினர், எதையும் 'ஒரே அடியாக'ச் செய்வது—வேரறக் களைவது—பூண்டின்றி அழிப்பது, அவர்கள் திட்டம், எதேச்சாதிகார ஆட்சி எந்த அளவுக்குச் செல்ல முடியும், அதற்குப் பலியாகும் மக்கள் எவ்வளவு இரத்தம் கொட்டவேண்டி நேரிடும் என்பதை எடுத்துக் காட்டவே பணிபுரிபவர்கள் போல அவ்விருவரும் நடந்து கொண்டனர்.

ஒருவர், வென்ட்வொர்த் என்பவர்; அறிவும் திறமையும் மிகுந்தவர், நேர்மையும் இரக்கமும் அற்றவர்.

மற்றவர் லாட் என்பார்; மார்க்கத் துறையினர், ஆனால் அறம் அழித்தலே ஆண்டவனுக்குத் தரப்பட வேண்டிய பூஜை என்று கொள்கை கொண்டவரோ என்று எவரும் எண்ணத்தக்க விதமான, செயல்புரிபவர்.

இருவரும் துணிவு மிகுந்தவர்கள், அரசனுடைய ஆதரவை முழுக்க முழுக்கப் பெற்றவர்கள்.

எதை எங்ஙனம் செய்தாலும்; என்ன முறையில் மக் களிடமிருந்து பணம் பறித்தாலும், எத்தகைய தாக்கீது பிறப்பித்தாலும், ஏன் என்று கேட்க, மாமன்றம் இல்லை, இவ்வளவு மோசமாக நடந்துகொள்ளலாமா என்று கேட் கும் இயல்பு மன்னனுக்கு இல்லை, எனவே இருவரும் துணிவுகொள்ளாமலிருக்க முடியுமா! துணிந்து கொடுமை கள் செய்தனர்.

வென்ட்ஒர்த், ஒரு காலத்தில் விடுதலை முழக்கமிடும் வீரர் வேடத்திலே காட்சி தந்தவர்—மாமன்றத்திலே மன் னன் ஆட்சி முறையைக் கண்டிப்பவர்களில், பிம், ஹாம் டன், எலியட், ஆகியோருடன் இருந்து, மக்களின் பாது காவலராக நடித்தவர், "மன்னன் நம்மிடமிருந்து எதை எதை எல்லாம் பறித்துக்கொண்டார் தெரியுமா! எதைப் பறித்துக் கொண்டாரா? எதை விட்டுவைத்திருக்கிறார்!" என்று பேசி, மக்களின் பாராட்டுதலைப் பெற்றவர், எனி னும், வென்ட்ஒர்த், வீரனாகவே இருந்து வந்தார்—மன் னர் செவியில் தன் குரல் விழவேண்டும், மன்னன் பார்வை தன்மீது விழவேண்டும், என்ற உள் நோக்கத்துடனேயே முழக்கமிட்டுவந்தார்.

யாரார் மக்கள் உரிமைக்காக மாமன்றத்திலே தீவிர மாகப் பேசுகிறார்களோ அவர்களைப் பிடித்திழுத்து, பதவி கொடுத்து, வாயை அடைத்துவிடவேண்டும் என்ற எண் ணத்துடன், சார்லஸ், எலும்புத் துண்டுகளை வீசியபோது, அதிலொன்றைக் கவ்விக்கொண்டு, மன்னனுடைய வேட்டை நாய் ஆகிவிட்டான் வென்ட்ஒர்த்! மக்கள் துரோகி வென்ட்ஒர்த் தீப்பொறி பறக்கப் பேசினான், உரி மைக்காக—பதவி பெற்றதும், தீயென மக்களைச் சுட லானான்! வேக வேகமாகப் பதவி உயர்ந்தது, தக்க திறன் படைத்தவன் கிடைத்தான் என்று அறிந்த மன்னன், நிர் வாகப் பொறுப்பை வென்ட் ஒர்த்திடம் ஒப்படைத்தான்—ஒரு குறிக்கோள் மட்டும் அவனிடம் கூறிவைத்தான், அரசன் ஆணைக்கு ஈடு எதிர்ப்பு இருத்தலாகாது என்பது தான் குறிக்கோள். வெண்ட்ஒர்த், மாமன்றத்தையும் மக் களையும் ஒதுக்கிவிட்டு மன்னன் ஆட்சிசெய்ய, என் னென்ன முறைகளை வகுக்கலாமோ அவ்வளவும் செய்து தந்தான். ஸ்டராபோர்டுபிரபுவானான்! மக்கள் துரோகி, மன்ன ரால் பிரபு ஆக்கப்படத்தானே செய்வான்!

வெண்ட்ஒர்த்தாக இருந்து ஸ்டாராபோர்டு பிரபு ஆன வனும் தேவாலய அலுவலனாக இருந்து, அரச மார்க்கத் துறைக்கே அதிபனான, லாட் என்பானும், சேர்ந்து செய்த கொடுமைமிக்க ஆட்சி, மன்னனையும், மன்னராட்சி எனும் முறையையும், அடியோடு வெறுக்கும் நிலையை உண்டாக்கிவைத்தது. இந்த இருவருடைய வேகமான வளர்ச்சியையும்; மோசமான கொடுமைகளையும் தடுக்கும் நிலையில் ஒருவரும் எழமுடியவில்லை. இருவரும் நண் பர்கள்!!

லாட், ஆணவம்மிக்கவன், யாரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுபவன்.

வெண்ட்ஒர்த், மாமன்றத்தார் என்னென்ன முறைகளைக் கையாள்வர் என்பதை அவர்களுடன் நெருங்கிப் பழகி அறிந்துகொண்டவன்; எனவே, எந்த முறைகளில் மாமன்றத்தாரின் போக்கைத் தடுக்க முடியும் என்றறிந்து காரியமாற்றினான்.

இந்த இருவரின் துணைகொண்டு, சார்லஸ், மக்களிட மிருந்து பணத்தைக் கசக்கிப் பிழியலானான்,

"மன்னர் உமக்கு 'வீரர்' என்று பட்டமளிக்க இசை கிறார்—கட்டணம் நாற்பது பவுன்!" என்று ஒரு உத்தரவு.

"எனக்கேன் ஐயனே! வீரன் என்றொரு பட்டம்"

"அரசர் அழைக்கிறார், மறுக்கிறாயே!"

"சொத்து சுகம் உள்ளவர்களுக்கு விருது தேவை—மன்னர் அவர்களுக்கு அளிக்கட்டும்—நான் ஏழை—எனக் கேன் விருது, எங்கிருந்து 40 பவுன் கட்டுவேன்"

"அரசர் அளிக்க விரும்பும் விருதை ஏற்க மறுப்பது, அவரை அவமதிப்பதாகும், இதற்காக உனக்கு அபராதம் விதிக்கிறோம்"

கட்டாயப் படுத்தி 'விருது' அளித்துப் பணம் திரட்டும் முறை இதுபோலிருந்தது. 11,5000 பவுன் இதன் மூலம் கிடைத்தது, முதலாம் எட்வர்டு மன்னன், இது போலக் கட்டணம் வசூலித்து, விருதுகள் வழங்கினான் இதனை முன்மாதிரியாகக்கொண்டு, பணம் திரட்ட இதனைப் பயன் படுத்தினான்; மாமன்றத்தை அழைக்காமல் நாடாள விழைந்த மன்னன்.

லாட், வெண்ட்ஒர்த், ஆகிய இருவரும், மிகமிகப் பொருளற்ற காரணங்களுக்காக எல்லாம், பணம் படைத்த வர்களை வழக்கு மன்றத்திலே இழுத்து நிறுத்துவர், பத்தாயிரம், ஐம்பதாயிரம் என்று அபராதம்! இது, அரசாங்கத்து வளமான வருவாய் ஆகிவிட்டது.

(தொடரும்)

# "கொக்கரகோ!"

சிலம்போ! சிலம்பு!

சிலம்போ! சிலம்பு!!

பத்தினியாம் கண்ணகியின் பாதச்
சிலம்பு!

பரத்தை லோலனை எந்தன் பாரியின்
சிலம்பு!

*

கூத்துமேடைப் பாட்டு, கேட்டிருப்பீர்கள் — கோவலன் மாதவியின் மையலிலிருந்து விடுபட்டு, கண்ணகியின் காற் சிலம்பை விற்று, பொருள் பெற்று, வாணிபம் தொடங்கி புதுவாழ்வு நடாத்த முற்படும், கட்டத்தின் போது பாடுவர்! அந்தக் கட்டம் வருவதற்கு முன்பு, கழுத்திலே விழுந்த மாலை கழற்ற முடியவில்லை!—திருக்கடையூர் தேரோடும் வீதி!! மானே! இனி நானுனை மறந்து வாழப்போமோ! தேனே, இனி உன்னைப் பிரிந்து உயிர் வாழ்வேனோ—இப்படிப்பட்ட கீதங்கள் — நடனங்கள் — இன்பப் பேச்சுகள் கொண்ட கட்டம் பலப் பல. கடைசியில் தான், காற் சிலம்பு!!

கடலூரில், வன்னிய குலத்தின் பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக் காகவும, பலர் கூடி நடத்திய மாநாட்டில், சிலம்போ! சிலம்பு! என்று கீதம் கிளம்பி இருக்கிறது!

கோவலன், மாதவி மனையில் தான்!

கழுத்தில் மாலை, நெஞ்சில் மையல், கையில் துடியிடை—நிலவு விளக்காக, தென்றல் வெண்சாமரமாக, இருக்கும் நிலை!

எனினும், சிலம்போ! சிலம்பு! என்று கீதம்மட்டும், கடலூர் மாநாட்டில் கேட்கப்படுகிறது! கனம். இராமசாமி, காங்கிரஸ் கூடாரத்தில்தான் இருக்கிறார்—மந்திரியாகத்தான்.

வன்னிய மக்களே! உங்களுக்கு வாழ்வளிக்கும் ஒரே நோக்குடன் தான், நான் இங்கு இருக்கிறேன்—இராமனிருக்குமிடம் சீதைக்கு அயோத்தி என்பரே அதுபோல, நானிருக்கும் இடம் வன்னியருக்கு ஏற்ற இடம் என்று கொண்டு, என் பக்கம் வருவீர் என்று அழைத்த வண்ணமே இருக்கிறார்.

எனினும், கடலூரில் கூடியவர்களோ, காங்கிரஸ் நமது குலத்தை ஏமாற்றிவிட்டது — நம்பி மோசம் போனோம்—கல்விச் சலுகை பறிக்கப்படுகிறது — தன்மானம் அழிக்கப்படுகிறது! எப்படி இதைத் தாங்கிக்கொள்வது — என்று கோபமும் சோகமும் ஒன்றை ஒன்று போட்டியிடும் முறையில் பேசியிருக்கிறார்கள்.

நம்மவர் மந்திரியானார் — மகிழ்ந்தோம்!

கல்விச் சலுகை இதோ என்றனர்—களித்தோம்!

இப்போது தானே, இதிலே உள்ள கபடம் வெளிப்படுகிறது.

நம்மைக் கருவேப்பிலை என்று கருதினார்?

நாமென்ன கிள்ளுக்கீரையா?

நாம், குற்றப் பரம்பரையினர் என்று சொன்னால்தான், கல்விச் சலுகை பெறலாம் என்று கூறுமளவு, காங்கிரசுக்கு நெஞ்சழுத்தம் ஏற்பட்டுவிட்டதே! எப்படி இதைச் சகித்துக்கொள்வோம்! எடுப்போம் துந்துபி! தொடுப்போம் அறப்போர்! வீரர்காள்! கேண்மின்! தோழர்காள்! வருமின்!!—என்று கடலூர் வன்னியகுல இளைஞர் மாநாட்டினர், முழக்கமிட்டுள்ளனர்.

கனம் இராமசாமியார் இதிலே காணப்படவில்லை — காரணம்கேட்கப்படவில்லை.

சர்க்காரின் போக்குப் பற்றி, விளக்கம் அறிய, மாநாடு கூட்டினர்.—இதிலே சர்க்காரின் கருத்தை எடுத்துரைக்கக்கூடிய கனம் இராமசாமி இல்லை!

அவரைக் 'கர்ணனாக'க் கொள்கின்றனரோ அல்லது மாநாட்டில் ஒரு அன்பர் கூறியதுபோல, போர் தொடுக்கப்பட்டதும், அவர் வந்துசேருவார் என்ற நம்பிக்கையுடன் உள்ளனரோ, தெரியக் காணோம்.

வன்னியர்களின் எழுச்சி கண்டு மனம்வெதும்புவதாலேயோ, அவர்களைப் பழித்துப் பேசுவதாலேயோ வகுப்புவாதஇயக்கமென்று தூற்றிவிடுவதாலேயோ பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியாது,உரிமைகளைத் தருவதுதான் முறைஅறிவுடைமை என்று பன்னிப் பன்னிப் பலகாலும் சொல்லிவந்தோம்—ஆள வந்தாரோ, வேறு முறையைப் பின்பற்றினர்—குலத்தின் தலைவர்களில் சிலருக்கு 'குல்லாய்' (கதர் தான்) போட்டுவிட்டால், குமுறல் அடங்கிவிடும் என்று எண்ணினர்—ஏமாற்றம் இப்போது 'பளீர்' என்று கிடைக்கிறது.

அதுபோலவே, இராமசாமி போன்ற சிலர், காங்கிரசில் இருந்து கொண்டு, குல முன்னேற்றத்தைச் சாதிக்கலாம், என்று எண்ணி 'கனம்' ஆயினர்—இப்போது எண்ணம் மணாளுகிக் கொண்டிருக்கிறது! இளைஞர் குழாம் முழக்கமிடுகிறது—எம்மைக் காங்கிரஸ் ஏய்த்துவிட்டது என்று. இதற்கு எடுத்துக்காட்டியுள்ள சம்பவம், உண்மையிலேயே நெஞ்சை உருக்குவதாகவும் இருக்கிறது.

ஜில்லாபோர்டுதேர்தலின்போது வன்னியருக்குக் கல்விச் சலுகை தரப்படுவதாக சர்க்கார் தெரிவித்தது.

தேர்தல் முடிந்தது—உழைப்பாளர் கட்சி உருக்குலைந்தது—காங்கிரஸ் வென்றது—கல்விச் சலுகையும் கரைந்தது!!

கல்விச் சலுகை, வன்னியருக்கு

என்று தரப்படுவதல்ல, குற்றப் பரம்பரையினருக்கே அந்தச்சலுகை. உமக்கு அந்தச்சலுகைவேண்டுமா? அப்படியானுல் குற்றப் பரம்பரை என்று கூறும் என்கிறது சர்க்கார் —இப்போது— துணிந்து!!

காற்சிலம்புவிற்கும் காட்சிபோல, இப்போது கடலூரில், எச்சரிக்கை! ஏமாற்ற எண்ணவேண்டாம்! எமது கோபத்தைக் கிளறவேண்டாம்! பகை மூளும்! என்று பரணிபாடப் படுகிறது!

கோவலனுவது மாதவிமனையை விட்டு விலகி, பிறகு காற்சிலம்பு விற்கிருன்.

இங்கோ, கனம் இராமசாமி காங்கிரசில் இருக்கும்போதே, வன்னிய மக்கள், காங்கிரசின் கபடத்தைக் கண்டறிந்து, கண்டிக்க முற்பட்டுள்ளனர்.

மூன்றேதிங்கள்! எங்கள் உரிமை மறுக்கப்பட்டால், மறியலும் செய்யத் தயார்!—என்று கூறி இருக்கிருர் அன்பரொருவர், கடலூரில்.

இதுபோன்றதோர் நிலை வந்தேதீரும் — எதிர் பார்த்ததுதான்— ஆனுல் இவ்வளவு விரைவிலா? என்று ஆச்சரியப்படுகிருேம்.

கனம் இராமசாமி, சின்னுட்களுக்கு முன்பு, புதுவை சென்று, தமது புதிய தத்துவத்தை விளக்கினுர்! புதிய தத்துவம் இது— எனக்கு மதிப்பளிப்பதாயின்—குல முன்னேற்றத்தில் உமக்கு அக்கரை உண்டு என்பது உண்மையானுல்—நீங்கள் இந்தத் தேர்தலில் காங்கிரசைத்தான் ஆதரிக்கவேண்டும் என்பதுதான் புதிய தத்துவம்.

இப்போது புதுவையில் காங்கிரசை எதிர்த்து ஒரு கட்சி நடத்துகிருர் செல்லன்நாயகர்!!

கடலூர் மாநாடு, அவரைப் பாராட்டியும், ஆதரவு தந்தும், தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது!!

காமராஜர் கட்டளையிட்டால், கனம் இராமசாமி புதுவைசென்று, செல்லன் நாயகருக்கு எதிராகப் பிரசாரம் செய்யவேண்டும்—மந்திரி சபையின் மாண்பும்—காங்கிரசின் கண்ணியமும் காப்பாற்றப்படவேண்டுமானுல்!!

வன்னியரின் உரிமைக்கே நான் பாடுபடுவேன் — நான் இப்போது மந்திரி, ஆனுல் எப்போதும் படையாச்சி—என்று பேசியதற்கு ஏற்ப, நடந்துகொள்ளவேண்டுமானுல், கனம் இராமசாமி, புதுவைசென்று, காங்கிரசை எதிர்த்து வேலை செய்திடல்வேண்டும்—செல்லன் நாயகர் சார்பில் நிற்கவேண்டும்.

நிலைமை, எவ்வளவு விசித்திரமாகிவருகிறது!! ஏன் இந்த நிலைமை? ஒரு மந்திரி வேலைக்காகவா இத்துணை குழப்ப நிலைமை!!

குலரட்சகர் இவரே! — என்று கூறிடுவது உண்மையானுல், கடலூரில் மாநாடு நடத்தியவர்கள் புதுவையில் காங்கிரசை ஆதரித்து, கனம் இராமசாமியாரின் வார்த்தைக்கு, காங்கிரசிலும் மந்திரி சபையிலும் மதிப்பும் செல்வாக்கும் நிலைக்கும்படி செய்தல் வேண்டும்.

காங்கிரசானுலும் சரி, வேறு எந்தக் கட்சியானுலும் சரி, எமக்கு எமது குல முன்னேற்றமே, உரிமையே குறிக்கோள் என்று கடலூரில் கூறியிருக்கிறபடி நடந்துகொள்வதானுல், காங்கிரசை எதிர்க்கவேண்டும்.

புதுவையில், காங்கிரசுக்கு எதிர்ப்பு! தமிழகத்தில், காங்கிரசுடன் கூட்டு—என்ருல் பொருத்தமிராது!!

இந்த நிலை வளர்ந்திருக்கிறது— துவக்கமே இது—தொடர்கதை எப்படியாகுமோ, யாரறிவார்! இறுதியில், "கொக்கரகோ!" என்று ஆனுலும் ஆகக்கூடும்!!

☆

# குமாரனும் குமரனும்!

கதிர்காமத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பவர், குமரக் கடவுள்! அவருக்கு 'வைத்யம்' பார்க்கிருர், குமாரரத்னம் எனும் பெயருடைய ஒரு டாக்டர்! கதிர்காமத்தைப் புனித நகரமாக்குவதற்கான வழி வகைகளை கண்டறியும்படி இலங்கை சர்க்கார் நியமித்த கமிட்டியில் இருப்பவர் இந்த டாக்டர் குமரன். அருள்பாலிக்கும் திருத் தலம் இருக்கும் இலட்சணத்தை அவர் எடுத்துக்காட்டுகிருர்! நாம் கூறினுல், தேவநிந்தனை என்பார்கள்! டாக்டர் குமரன் கூறுவதால், அது பரிசோதனை என்ருகிவிடுகிறது.

கதிர்காமம், குப்பைமேடுபோலிருக்கிறது—எங்கும் ஒரே துர்நாற்றம்— அசுத்தம் என்று கூறுகிருர் டாக்டர்.

பக்திக் கதிரொளி பரப்பவேண்டிய கதிர்காமத்திலிருந்து தொத்து நோய்க் கிருமிகள் கிளம்பி, பலரைச் சாகடித்ததைச் சுட்டிக் காட்டுகிருர். 1947-ல் தொத்துநோய் மக்களைப் பெரும் அளவில் பலிகொண்டதாம்.

நாயும் ஈயும் ஏராளமாம் இங்கு! முருகன் கையில் வேல் இருக்கிறது! இருந்து! தொல்லை தாங்கமுடியவில்லை என்கிருர் டாக்டர்.

சேரிகள் சூழ இருக்கின்றன, எனவே துர்நாற்றமும் அசுத்தமும் ஏற்பட்டு, பக்தர்களைத் திக்குமுக்காடச் செய்துவிடுகிறதாம்! பக்தர்கள் நீராடும் மாணிக்கக் கங்கையின் நீர், அசுத்தப்படுத்தப்பட்டுக் கிடக்கிறதாம்!

புனித நகரம், இருக்கும் இலட்சணம் இது!

பக்தர்களுக்கு இதைப்பற்றி எல்லாம் என்ன கவலை? நாய் கடித்தாலும், வண்டு கொட்டினாலும், நாற்றம் மூக்கைத் துளைத்தாலும், தண்ணீர் வாந்தியைக் கிளப்பிடும் குமட்டலைத் தந்தாலும், தொத்துநோய் பிடித்தாலும், முருகா! முருகா! என்று கூறிவிடுகிருர்கள்!! பக்தியின் பேரால் மாட்டுச் சாணியையும் சிறு நீரையும் கூடப் பருகும்போக்கினர் இருக்கும்போது, கதிர்காமத்திலே அடிக்கும் துர்நாற்றத்தைத் தாங்கிக்கொள்வதா சிரமம்! டாக்டர்களுக்கு வேண்டுமானுல், கோபம் வருத்தம் பிறக்கும், பக்தர்களுக்கு இதா கவலை!! அவர்கள், "ஐயன் சிங்காரங்களைப் பாரும்! முருகன் ஏறும் அழகு மயிலினைப்பாரும்" என்று பாடி ஆடி வருகிருர்கள்!! சந்தேகமிருப்பவர்கள், சற்று பொறுத்திருந்து பாருங்கள், சேறு சந்தனமாகிவிடப்போகிறது, இந்த விசித்திரங்களுக்கு, கும்பகோணம் 'மாமாங்கத்தில்!' நல்ல சர்க்காராக இருந்தால், இப்படி ஒரு பெருங் கூட்டம், சேற்றிலே,, பக்தியின் பெயரால் புரள்வது, கேவலம், என்பது, மட்டுமல்ல, இதன் பயனுக நாட்டிலேயே பயங்கரமான வியாதிகள் பரவும் என்று காரணம் காட்டி, மாமாங்கத்தைத் தடை செய்யவேண்டும்! அப்படிப்பட்ட துணிவுள்ள சர்க்கார் எங்கே இருக்கிறது!

☆

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

—அதற்கும் பிறகு காங்கிரஸ் மேடைகளிலேயே!!

இதை நான் மிகவும் ரசித்திருக்கிறேன்.

இந்தி எதிர்ப்பு பேசும் காங்கிரஸ்காரர்களை அடக்கியாக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது, சத்தியமூர்த்திகளுக்கு.

சத்யமூர்த்திகள் தடை விதித்தாலும் மீறி, தாய்மொழியைக் காக்கும் பணிபுரிந்தாகவேண்டும் என்ற கட்டம் வந்துவிட்டது நடராசன் போன்றோருக்கு.

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் இந்தப் பிரச்சினை கிளம்பிவிட்டது! நல்ல வார்த்தை சொல்லி நடராசனைக் கோட்டையில் பூட்டிவிட சத்தியமூர்த்தி திட்டமிட்டார்! தாய்மொழிப் பற்றுக்கு இடமளித்து விட்டபிறகு, நடராசன் காங்கிரசின் கட்டுதிட்டத்தை உடைத்தெறிந்துவிட்டு வெளிவந்துவிடுவார் என்று எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது.

எனவே, சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெறும் நாளே, நான், நமது நண்பர்கள், சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் நடத்தும் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில், காங்கிரசை விட்டு விலகிய என். வி. நடராசன் பேசுவார் என்று துண்டு அறிக்கை அச்சிட்டு காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடைபெறும் இடத்துக்கே நண்பர் கணேசன் மூலம் அனுப்பி விட்டேன்.

உள்ளே, கெஞ்சுதல் கொஞ்சுதல் மிரட்டல், சபித்தல், ஆகிய எல்லா ரசமான கட்டமும் நடந்தேறி, நடராசன் ராஜிநாமாச் செய்துவிட்டு வெளியே வந்தார்—அவரிடம் இந்த 'நோடீஸ்' தரப்பட்டது—எப்படி இதற்குள் அச்சிட்டுவிட்டீர்கள் என்று கேட்டார் — இது காலையிலேயே அச்சாகிவிட்டது — இது போலத்தான் நடக்கும் என்று தெரிந்து அச்சிடப்பட்டது என்று கணேசன் கூற, நடராசன், அப்படியா? என்று கேட்டுவிட்டு, நேரே, இந்தி எதிர்ப்புக் கூட்டத்துக்கு வந்தார், அன்று துவக்கப்பட்ட அரும்பணி, நாளாகவாக, தரமும் திறமும் வளரும் வகையில் நடைபெற்றவண்ணம் இருக்கிறது.

எனவேதான் தம்பி, நான் சொல்வது, காங்கிரஸ் நண்பர்களிடம், நமது கொள்கையை எடுத்துக் கூறுவதிலே, பண்புவேண்டும் என்று. அவர்கள் இன்று கோபம் கொண்டவர்களாக இருக்கிறார்களென்றால், நாம் இன்னும் அவர்கள் உள்ளத்தில் புகத்தக்க விதமாக, நமது கொள்கையை எடுத்துரைக்கவில்லை என்றுதான் பொருள்! நடராசர்கள், எங்கும் இருக்கிறார்கள்!! அவர்களை 'நம்மவர்'களாக்கிக்கொள்ளும் திறமை நமக்கெல்லாம் வளரவேண்டும்!! அவர்கள் எப்போதுமே எதிர்முகாமிலேயே இருந்து தீருவார்கள் என்று எண்ணி, அவர்களைக் கண்டதும் முகத்தைச் சுளித்துக் கொள்வதும், அவர்கள் உருட்டு விழி காட்டினால் நாமும் அதுபோலாவதும் கூடாது. நாளாகவாக அவர்களுக்கு, காங்கிரஸ் இன்று யாருடைய கூடாரமாகி வருகிறது, என்பது புரியத்தானே போகிறது! உழைக்க ஒரு கூட்டம், அரசியல் உல்லாச வாழ்வு நடாத்த வேறோர் கூட்டமல்லவா வந்துவிட்டது! தடியடியும் சிறைவாசமும் முத்துராமலிங்கத் தேவருக்கு! மந்திரிப் பதவியும் அதனால் கிடைக்கும் மதிப்பும், ராமநாதபுரம் ராஜாவுக்கு—அதாவது ராஜாவாக இருந்தவருக்கு!! பட்டேல் வருகிறார்—பணப்பை ஜாக்கிரதை!! என்று லட்சக் கணக்கில் எச்சரிக்கை நோடீஸ், அபாய அறிவிப்புத் தாட்களை அச்சிட்டு வழங்கிய வட்டி வேந்தர்கள் காங்கிரஸ் வட்டாரத்திலே இன்று வட்டமிடுகிறார்கள். உண்மை ஊழியம் செய்து, காங்கிரசை ஊராளும் கட்சியாக மாற்றி அமைத்த காங்கிரஸ்காரர்களுக்கு இந்தக் காட்சி, பெருமையும் பூரிப்பும் தரும் என்று எண்ணுகிறாய்! அவர்களும் மனிதர்கள்தானே, தம்பி! மனம் படாதபாடு படத்தான் செய்யும்.

செட்டிநாட்டு அரசர் இன்று காங்கிரசுக்கு ஒரு செல்லப்பிள்ளையாக இருக்கிறார்! இது காங்கிரசின் வளர்ச்சியையா காட்டும்!! தியாகத் தழும்பேற்ற காங்கிரசார்களைப் பார்த்து, கேலிபேசும் கண்களல்லவா, செட்டிநாட்டரசருக்கு இருந்திடக் காண்கிறோம்! ஆளும் கட்சிக்கு எந்நாளும் ஆதரவாளர் நாங்கள்—முன்பு வெள்ளையன் ஆண்டுவந்தான், வெண்சாமரம் வீசிநின்றோம், இடையே தமிழர்வம் ஓங்கிநின்றது, ஆட்சி தமிழரிடம் வந்து சேரும்போல் தோன்றிற்று, உடனே அவர்களோடு குலவினோம், செங்கோட்டையில் காங்கிரஸ் கொடி ஏறிற்று உடனே எங்கள் கோட்டையிலும் மூவர்ணக் கொடி ஏற்றிவிட்டோம்—எப்போதும் ஆளவந்தாரின் ஆதரவாளர் நாங்கள் — என்றுதானே செட்டிநாட்டரசரின் புன்னகைபேசுகிறது இது காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரியாதா!

கொடியைக் கரத்தில் ஏந்திக்கொண்டு, தமிழர் வாழ்க! இந்தி ஒழிக! என்று முழக்கமிட்டுக் கொண்டு ப்யூக்கும் செவர்லேயும் இருக்க, தங்கசாலைத் தெருவிலிருந்து, கடற்கரை வரையில் நடந்துவந்தார், இன்றைய செட்டிநாட்டரசர், அன்று குமாரராஜா நாமாவது அவரை ஓரளவுக்கு வேலை வாங்கினோம்—மணிமாடத்துக்குச் சொந்தக்காரர் அவர், எனினும் மண்மேடுகளுக்கு இழுத்துவந்தோம்! வியர்வை அரும்புமோ என்று எண்ணினாலே வெட்டிவேர் விசிறிகொண்டு வீசிட ஏழெட்டுபேர் எப்போதும் தயாராக இருந்தனர் அவருக்கு—கொட்டிடும் வியர்வையைத்துடைக்கவும் கூசப்பட்டுக்கொண்டு, கொடிபிடித்து ஊர்வலத்தில் நடந்தார் குமாரராஜா! நாம், குமாரராஜாவுடன் கூட்டுறவு வைத்துக் கொண்டதால், அவருக்கு ஏற்றபடி கொள்கையைக் குறுக்கிக் கொள்ளவில்லை, கொள்கையின் குணமும் மணமும் வளர்ந்தது—வளருகிறது — காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது, அவர் அந்தப்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

வருகிற, *10—7—55*ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணி அளவில், திசையன்விளையில், எனக்கும் தோழியர் அலிஸ் ஞானம் மாளுக்கும், அண்ணா அவர்கள் தலைமையில் K. R. இராமசாமி, M. G. இராமச்சந்திரன், N. S. நாராயண பிள்ளை, S. முத்து ஆகியோர் முன்னிலையில் நடைபெறவிருக்கும் திருமண விழாவிற்குத் தாங்கள் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

M. S. இராசையா,
(ஆனந்தன் டிரஸ் கம்பெனி)

பக்கம் திரும்பினார், அங்கு அழைப்பு கிடைத்தது, சென்றார், வென்றார்: வென்றார் என்றால் உண்மைக் காங்கிரசைக் கொன்றார் என்று பொருள்—நாமோ, இருந்தார், சென்றார்; நாம் இலட்சியபுரி நோக்கி நடைபோடுவோம், என்று தொடர்ந்து நமது பணியினை ஆற்றிவருகிறோம். காங்கிரஸ் நண்பர்களுக்கு இதெல்லாம் தெரியாமலா இருக்கும்! இவை தெரியாததுபோல இருக்கிறார்கள்—ஆனால் நமது கழகம் மக்கள் மன்றமாகி விட்டதையும், காங்கிரஸ் சிங்காரச் சீமான்களின் மாளிகையாகிவிட்டதையும் அவர்கள் அறியாமலில்லை —அறிந்தோர் மனதிலே ஆயாசம் எழாமலில்லை! வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்கள்—அதுவும் கொஞ்சகாலம் வரையில்தான்!

தம்பி! சென்ற கிழமை, காங்கிரசின் உண்மை உழைப்பாளியின் உள்ளன்பைப் பெற்று உயர் இடத்தில் அமர்ந்துள்ள காமராஜரின் திருவுருவப்படத்தை, மத்திய சர்க்கார் மந்திரி, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் திறந்துவைத்து, பாராட்டுரை வழங்கியிருக்கிறார், என்றொரு செய்தி வந்தது, பார்த்திருப்பாய் யார், இந்த டி. டி. கி? காமராஜர் நல்லவர் —உழைப்பாளி — அபாரமான செல்வாக்கு அவருக்கு, என்று புகழ்கிறாரே, இந்த டி. டி. கி. யார்? காமராஜர், வனவாசம் செய்தபோது உடன் இருந்தவரா? இல்லை! இல்லை! அப்போது சுகவாசம் செய்துகொண்டிருந்தவர்! சிறையில் தோழரோ? இல்லை! உப்புச் சத்யாக்கிரகத்துக்குத் திட்டம் தீட்டிய தீரரோ? கள்ளுக்கடை மறியலில் கலந்துகொண்ட கர்மவீரரோ! அன்னியச் சாமான்களை பகிஷ்கரித்த ஆற்றல்மிக்க தேசபக்தரோ? இல்லை, தம்பி, இல்லை. சோப்புச் சீமான்; சொகுசான வாழ்க்கை நடத்திவந்தவர், அன்னிய நாட்டு லக்சும், வினோலியாவும் அவருடைய கதர், கைராட்டை. காங்கிரசைத் தேர்தலிலே எதிர்த்து முறியடித்து, ஒரு முறை சென்னை சட்டசபையில் எதிர்க் கட்சியிலும் வீற்றிருந்தார். ஆகஸ்ட்டுப் புரட்சி, செப்டம்பர்சத்யாக்கிரகம், எதிலும் அவர் ஈடுபட்டதில்லை. ஆனால் இன்று, அவர் மத்திய சர்க்கார் மந்திரியானார்! அவர் திருக்கரம் பட்டால் மதிப்பு, அவருடைய திருவாயால் புகழுரை சொரிந்தால் பெருமை என்று கருதும் வகையில், அவரைக் கொண்டு காமராஜரின் திருஉருவப் படத்தைத் திறக்கச் செய்தனர். அந்த நேரத்தில், அந்நாள் இந்நாள் நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் உள்ளம் கொண்ட உண்மைக் காங்கிரஸ்காரர் வெட்கமும் வேதனையும் அடையாமலிருக்க முடியுமா. வெளியே காட்டிக்கொள்ள மாட்டார்கள்—உள்ளத்திலே வேதனை அரித்தபடிதான் இருக்கும். அவர்களெல்லாம், ஒரு கொள்கை புனிதமானது திட்டம் தேவையானது, என்று உணரும் வரையில்தான் நம்மீது காய்வர், பாய்வர், ஆனால் நாம் எடுத்துரைக்கும் கொள்கை நியாயமானது, திட்டம் தேவையானது என்று உணர்ந்துவிட்டால், நிச்சயமாக, நம்மைப் பின்னணியில் தள்ளிவிட்டு, முன்னணி நின்று, வீரப்போர் புரியக்கூடியவர்கள்—இதை அவர்களிடம் பேச நேரிடும்போதெல்லாம் மட்டுமல்ல நம்மைப் புரிந்துகொள்ளாததால் அவர்கள் நம்மை ஏசும்போதெல்லாம்கூட, நினைவிலே வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

மேடை தவறாமல் நம்மை நிந்தித்துத்தான் வருகிறார்கள்—ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் கண்டிப்பது அக்ரமம் என்று பேசத்தான் செய்கிறார்கள்—ஆனால் குற்றாலத்திலேகூட என்ன தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதைக் கவனித்தாயா, தம்பி, தென்னாட்டிலேசில பெரிய கனரகத் தொழிற்சாலைகளாவது அமைத்தாக வேண்டும் என்று, வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்கள்,

**“இப்படியாவது ஒரு தீர்மானம் போடாவிட்டால் மக்களின் மனம் எரிமலையாகும்”**

**“வடநாட்டாருக்கு, நாமும் விழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டியாக வேண்டும்”**

**“குட்டக் குட்ட குனிந்துகிடப்பது, அறிவுடமையுமல்ல ஆண்மையுமாகாது”**

**“முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தான் துரோகம் செய்தனர்—ஏமாற்றப் பட்டோம்-இரண்டாவதுதிட்டத்திலாவது நியாயம் கிடைக்கவேண்டும்”**

**“கழகக் காரர்கள் மானம்போகிற மாதிரி பேசுகிறார்கள்-அவர்கள் சொல்வதும் உண்மையாகத்தான் இருக்கிறது. வடநாடு. நம்மைக் கேவலமாகத்தான் நடத்துகிறது”**

**“கழகம்கிடக்கட்டும், சுதேசமித்திரன் கார்ட்டூனுக்கு என்ன சொல்கிறீர்கள்?”**

**“அழுதபிள்ளைக்குந்தான் பால்கிடைக்கும்; தூங்குபவன் தொடையில் கயிறு திரிக்கத்தான் செய்வார்கள்”**

இதுபோலவும், இதைவிடக் கடுமையாகவும் பேசினவர்கள், எத்துணை பேரோ, யார் கண்டார்கள்.

ஒரு தீர்மானம் போட்டாகவேண்டிய நிலைமை பிறந்திருக்கிறது — சாதாரணமென்று இதற்குப் பொருள்!

குற்றாலத்துத் தீர்மானம், கண்களை இறுக மூடிக்கொண்டு, காதுகளையும் அடைத்துக்கொண்டு இருப்பது போலக் காணப்பட்டு வந்த காங்கிரஸ் நண்பர்கள், உண்மையில், நாம் கூறிவந்ததை மிகக் கூர்ந்து கவனித்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள் என்பதையும், நம்மைக் கண்டித்துப் பேசியவர்கள், அதேபோது உள்ளூர, வடநாட்டு வஞ்சனையைக் கண்டித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதையுந்தானே, காட்டுகிறது. இல்லையானால், இப்படி ஒரு தீர்மானம் தீட்டவேண்டிய அவசியமும் அவசரமும் என்னவந்தது? தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற உண்மை உள்ளத்தை உறுத்துவதாலேதான், இரண்டாவது திட்டத்திலாவது நியாயம் கிடைக்கச் செய்யுங்கள் என்று கேட்கவேண்டி வந்தது. இல்லையானால் வீரதீரமாக, வடநாடு தென்னாட்டுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் துரோகம் செய்தது என்று கூறுவது தேசத்துரோகம்—என்று கனல் கக்கிடும், தீர்மானம் நிறைவேற்றிவிட்டல்லவா மறு காரியம் பார்த்திருப்பார்கள்.

தம்பி! நம்மைவிட அடிக்கடி, வடநாடுபோய் வருகிறவர்கள் தானே, காங்கிரஸ் தலைவர்கள்! அங்கே பொங்கிடும் வளமும், அதன் பயனாக ஓங்கிடும் கர்வமும்

அவர்கள் காணுமலா இருக்கிருர்கள்! கண்டு, வெட்கமும் வேதனையும் கொண்டு, பிறகு, கட்சி கட்டு. திட்டம் இவைகளை எண்ணி விம்முகிருர்கள்! விறுகொண்டெழும் காலம் வெகு தொலைவில் என்று கருதாதே — விரைவிலேயே வரக்கூடும், நீயும் நானும், அவர்களுடைய இதயத்தைத் தொடும் வகையில், விஷய விளக்கம் தர வேண்டும்.

எங்களுக்கும் தெரியும் — என்று ஆரம்பத்தில் ஆதீன கர்த்தா பாணியில் பேசுவர்.

எங்களுக்கு மட்டும் தெரியாமலா இருக்கிறது—என்று அன்பாகப் பிறகு கூறுவர்.

எங்களுக்குத் தெரியும். நாங்கள் இதற்காவன செய்வோம்—என்று உறுதி அளிக்க முன்வருவார்கள், அடுத்த கட்டத்தில்.

நாம் ஒன்றுபட்டுக் கேட்டால்தான், வடநாடு வழிக்கு வரும்!

கெஞ்சியது போதும் — இனி கிளர்ச்சிதான்!

மயிலே மயிலே இறகு போடென்ருல் போடுமா!

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தையே ஒருகை பார்த்தோம், இந்த மார்வாடி ஏகாதிபத்யத்தை விழ்த்துவதா முடியாத காரியம்!

விழித்தெழுவீர் விடுதலைப் போரில் ஈடுபடுவீர்!

திராவிட நாடு திராவிடருக்கே!

இவ்விதமெல்லாம், படிப்படியாகத்தான், பிரச்சினை உருவெடுக்கும்.

அந்த நம்பிக்கையுடன் பணியாற்ற வேண்டியதுதான் நமது பொறுப்பு.

திருவாடுதுறை ராஜரத்தினம் பாணி, தம்பி, உனக்குத்தெரியுமோ என்னமோ!

அவருடைய உள்ளத்தில் நன்ருக வாசிக்கவேண்டும் என்ற எண்ணம் பிறந்துவிடவேண்டும், பிறகு, கேளேன் அந்த நாத இன்பத்தை! வீணையும் பிடிலும், குழலும் ஷெனுயும், கோட்டும் பிறவும் ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டு, வெளியே உலவி, கேட்போரின் மனமெல்லாம் இசை மயமாக்கிவிடுகிறது. அவரிடம் உள்ள நாயனம் நமக்கு நல்ல இசை அமுது அளிக்கவேண்டுமானுல், நமக்கு மகிழ்வளிக்கவேண்டும் என்று அவர் எண்ணினுல் தானே! கால் ஆயிரம் தருகிறேன் காம்போதி வாசித்துக் களிப்பூட்டு, ஆயிரம் தருகிறேன், தோடி நடக்கட்டும், மேலும் தருகிறேன் மோகனம் நடக்கட்டும், என்று கூறினுல், இசையா கிடைக்கும்! காங்கிரசிலுள்ள உண்மை ஊழியர்கள், இது போலத்தான், அவர்களின் உள்ளம், நமது கோரிக்கைக்கு இடமளிக்கவேண்டும்—பிறகு பாரேன், அவர்களின் தீவிரத்தை நிரத்தை! அந்த நிலையைப் பெற, நாம்தான், முறையாகப் பணியாற்ற வேண்டும்.

இழிமொழி, பழிச்சொல், ஈனத்தனமான தாக்குதல், இட்டுக்கட்டிப் பேசுவது, இல்லது புனைதல், ஏசல் வீசுதல், என்பன போன்ற எத்தகைய கணையும் நம்மை நிலை இழக்கச் செய்யக்கூடாது—இந்தப் பரிபக்குவம் நமக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்கள் இல்லாமற் போகவில்லை — இருந்துவிட்டுவந்த இடத்தில் நுழைந்துகொண்டு, நோட்டம் பார்க்கும் நண்பர் விசும் நாசல் நடை நமக்கு வேறு எதற்குப் பயன்படுகிறது, என்று எண்ணுகிருய்! இந்த பரிபக்குவம் பெறத்தான்! ஒரே கலத்தில் உண்டவர்கள் என்று சொல்லிக்கொள்ளத்தக்க அளவுக்கு உறவு இருந்த இடத்திலிருந்தே, நித்த நித்தம், குறிதவறினுலும் கவலைப்படாமல், ஏசல் பாணங்கள் சரமாரியாக கிளம்புகிறது—துவக்கத்தில் தம்பி உன்போன்றவர்களுக்குக் கோபமாகக்கூட இருந்தது, இப்போது ஒரு நாலு நாளைக்கு அவ்விதமான பாணம் கிளம்பாவிட்டால், ஐயோ; பாவமே; என்ன உடற்புக்கு; என்று கேட்கும் பரிதாப உணர்ச்சி அல்லவா வருகிறது—அந்த தூற்றல் பாணங்களைப் பார்த்துப் பார்த்துப் பழகிவிட்ட நமக்கு, காங்கிரஸ் வட்டாரம் ஏவும் கண்டனக் கணை பிரமாதமாகத் தாக்கத் தெரியக் காரணயில்லை. நம்மைப் புரிந்துகொள்ளாததால், காங்கிரஸ் வட்டாரம் கணைவிடுகிறது; நாம் பிரிந்துவிட்டதால் குருபீடம் கணைவிடுகிறது!! பொறுமை, அமைதி கண்ணியம் எனும் அருங்குணத்தையும் பெறவும்; தூற்றுதலைத் தாங்கிக்கொள்ளும் மனதிடத்தையும்; நோக்கத்தை மாற்ற முனைவோர் விசும் நிந்தனையைப் பொருட்படுத்தலாகாது என்ற உள்ளப் பாங்கையும் நாம் பெற இப்போதும் குருபீடம் அருள் புரிகிறது!! இன்னும் நமக்கென்ன குறை!!

குருபீடத்தில் நாமெல்லாம் குற்றேவல் புரிந்துகொண்டு கேட்டறிந்த உபதேசத்தை மறவாமல், நாம் தொடர்ந்து பணியாற்றி வருகிருேம்.

என்னைப் பொறுத்த வரையில், தம்பி! நான அங்கு இருந்தபோது கிடைத்த பாடத்தைவிட, அரும் பெரும் பாடத்தை, இப்போது குருபீடத்திலிருந்து பெறுகிறேன் ஏசல் கணைகள் மூலம்—என் உள்ளம், தாங்கும் சக்தியை மிகத் திறம்படப் பெற்று வருகிறது. எனவேதான், என்னுல் மாற்றுக் கட்சிக்காரரிடம் மனமாச்சரியம் துளியும் கொள்ளாமல், கொள்கைகளை எடுத்துச் சொல்லும் பக்குவம் நிறம்பத் தேவைப்படும் வகையான பணியாற்றும்படி, உன்னைக் கேட்டுக்கொள்ள முடிகிறது; அண்ணனுக்குக் கிடைத்துள்ள மனப்பாங்கு, தம்பிக்கும் உண்டு என்ற நம்பிக்கையுடன் தான் இவ்விதம் கூறுகிறேன்.

அன்புள்ள,

**அண்ணாதுரை.**

## திருமணம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மகன் திரு. மன்னர் மன்னன் எனும் கோபதிக்கும்; மைசூர் அரசவைக் கோள்நிலை ஆராய்ச்சி வல்லுநர் வீரராகவனுர் மகள் திருமதி. சாவித்திரிக்கும் புதுவையில் 26—6—55 காலை கோவை சி. ஏ. அய்யாமுத்து தலைமையில் திருமணம் நடைபெற்றது.

தோழர்கள் A. P. ஜனுர்த்தனம் வீராசாமி M. P., தொழிற்சங்கத் தலைவர் வ. சுப்பையா, ஆசிரியர், வேலாயுதனுர், முத்து, திருமதி வ. சு. மஞ்சுளாபாய் மற்றும் பலர் வாழ்த்துரையாற்றினுர். பன்மொழிப் புலவர் ஞா. தேவநேயப்பாவாணர், புலவர் வை. பொன்னம்பலனுர், பேசினர். புதுமணத் தம்பதிகளுக்கு நம் வாழ்த்துக்கள்.




## அபஜெய காண்டம்

ராகவாச்சாரியார்:- முதலியாரவாள்! என்ன இருக்கிறது இதிலே எல்லாம்; க்ஷணப்பொழுது நடைபெறும் பொம்மலாட்டம்; வேறே என்ன!

ரங்கநாதர்:- ஆமாம் சாமி! சந்தேகமென்ன. ஆனால் எங்கே இந்த ஜனங்களுக்கு இந்த ஞானம் வரப்போகுது. என்னமோ எல்லாவற்றையும் தங்கள் தலைமேலே மூட்டை கட்டி வைத்து தூக்கிக் கொண்டு போகப்போவது போலத்தான் அலைகிறதுகள்.

ராக:- ஞானம் இல்லை, முதலியாரவாள்! ஞானம் ஏற்படவில்லை. ஏன் என்கிறீர்? சத்சங்கம் இல்லை. சத்விஷயங்களைப் பத்தின கேள்வி ஞானம், இல்லை!



ரங்:- நீங்க ஒரு பைத்யம் சாமி! அவனுங்க தான், நம்மை எல்லாம் ஞான சூன்யங்கள்னு ஏசறானுங்க......நம்ம பேச்சை யாவது அவனுங்க கேட்பதாவது......

ராக:- ஒருயோசனை சொல்லட்டுமா?

ரங்:- எதுக்கு?

ராக:- ஜனங்களோட க்ஷேமத்துக்குத்தான்.

ரங்:- என்னது அது......

ராக:- ஸ்ரீமத் ராமாயணகாலட்சேபம் ஏற்பாடு செய்துடுவோம்— ஆறுமாதம் — சித்ரகூடப் பாகவதர்னு கேள்வியுண்டோ மகா சிலாக்யமான உபன்யாசம்......

ரங்:- யாரு? யாரோ, உங்கபந்துன்னு சொல்வாங்களே......

ராக:- ஆமாம்........கலெக்டராகப் போயிருக்க வேண்டியவர், எம்.ஏ.பி.எல்.,......

ரங்:- கேள்விதான்...ரிவின்யூ இலாக்காவிலே இருக்கச்சே என்னமோ இரண்டு மூணு பிரம் கையாண்டதாக...

ராக:- பழிசுமத்தினா, மகாபாவிகள்! கேஸ் நடத்தியிருந்தாரானா, ஜெயம்தான், ஆனா, என்ன செய்தார் தெரியுமோ? ராமா! இது உன்னோட சோதனைடாபபா! இதோ வந்துட்டேன் உன் சேவைக்குன்னு சபதம் செய்துண்டு வாயைத் திறவாமப்படிக்கு மூவாயிரத்தையும் கட்டிவிட்டார். கட்டிவிட்டா விட்டுவிடுவாளோ, ஜெயிலுக்குத்தான் அனுப்புவான்னு கண்டவா கண்டபடி பேசினா. ஆனா ராமானுக்ரஹம்னா என்ன சாமான்யமா! மேலதிகாரிகள் வழக்கை வாபஸ் வாங்கிண்டா. பார்த்தீரோ ராமநாம மகிமையை...

ரங்:- அவருடைய கதாகாலட்சேபம் வைத்தா நல்லது என்கிறீரா..

ராக:- ஏற்பாடு செய்துவிட்டேன் முதலியாரவாள்! அடுத்த புதன் இங்கே வர்ரார்...

ரங்:- அப்படியா...சரி...

ராக:- மொத்தமா ஆயிரத்தொண்ணு...

ரங்:- ரூபாயா?

ராக:- பஞன்கூடத்தான் தரலாம்... ஆனா, முடியுமோ...

ரங்:- எங்கேமுடியுது...நான்பாருங்க நம்ம கிராமத்திலே துரோபதை அம்மன் திருவிழாவிலே பாரதம் படிக்கறதுக்கு, நம்ம படவேட்டராயர் இருக்காரே, அவரை ஏற்பாடு செய்துவிட்டு, இப்ப படாத பாடுபடறேன். ஒரு பயலும் காசு தரமாட்டேன்கிறான். பூராச் செலவும் நம்ம தலையிலேயே விழுந்தது, ரொம்பச் சிரமமாயிட்டது......

ராக:— பாரதம் புண்ய கதைதான் ......ஆனாலும்......

ரங்:- இராமாயணம்மாதிரி ஆகாது என்கிறீர். ஆமாம், சந்தேகமென்ன, எதோ என் சக்தியானுசாரம் நான் பாரதம் ஏற்பாடு செய்தாச்சி, நீங்க உங்க சக்திக்குத் தகுந்தபடி, ராமாயணம்நடத்திவையுங்கோ. இப்படி நாம், ஆளுக்கு ஒரு காரியமா எத்து நடத்தினாத் தான், கட்டிவரும். நான் புறப்படட்டுங்களா, நாளை மறுநாள் திமிதிக்கறது — விறகுக் கடை பக்கம்போகணும்......

ராக:- சரி......

## அமளிக் காண்டம்

காமாட்சி:- காயா, பழமா?

ராகவாச்சார்:- அவனண்டை போனா பழம்கூட அழுகின்னா போயிடும். கொடாகண்டனாச்சே......

கா:- விடியாமூஞ்சி வேலைக்குப் போனா, எப்படி ஜெயம் கிடைக்கும்னேன்.. உமக்கு எங்கே வரப்போறது, சாமர்த்யம்.

ராக:- சும்மா கிடடி! நான் நாலு நாழியாப் பேசி, அதைச் சொல்லி இதைச் சொல்லி, ராமாயணம் வைக்கலாம்னு சொன்னா, அவன், நான் ஏற்கனவே கிராமத்திலே பாரதம் நடத்தறனேன்னு, சொல்லி விரட்டறான்........

கா:- இருந்தா என்னடாப்பா! உன்னோட செல்வத்துக்கும் வருமானத்துக்கும் இதெல்லாம் ஒரு பெரிய காரியமா, உன்னைப் போன்ற லட்சுமி புத்ரா இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யாமப்போனா, வேறு யார் முன்வருவா, அப்படி இப்படின்னு, மனசு இளகறமாதிரியாப் பேசணும்........உமக்கு எங்கிருந்து வரப்போறது...... மூஞ்சியையும் மூக்கரக் கட்டையையும் பார்க்கிறபோதே, கதவை இழுத்துத் தாள் போட்டுடறா........

ராக:- போதும் போடி, வாயாடினது. டால் அடுக்குதேதா உன் முகம்—போய்க் காட்டேன் அவனிடம்......நேக்குச் சாமர்த்யமாகப் பேசத் தெரியல்லே...... நோக்குத் தெரியுமேன்னா, போ, போய்ப் பேசி ஜெயித்துண்டு வாயேன், பார்ப்போம் ........



கா:- இப்படி வம்பு தும்பும், அடாதுடியும் பேசத் தெரியும் உமக்கு; வேறென்ன தெரியும். போன காரியத்தை முடிச்சுண்டு வரச் சாமர்த்யமில்லேன்னாலும், கோபம் மட்டும் வந்துடறது பொத்துண்டு.....

ராக:- ராமா! ராமா! ராமா! தலை தலைன்னு அடிச்சிண்டு எங்காவது தேசாந்திரம் போகலாம்டாப்பா, இவளிடம் சிக்கிண்டு பிராணனை விடறதைவிட. எவண்டி உன்னோடை அண்ணனை அழைச்சி, ராமாயணம் நடத்தச் சொல்லுவன். ஊர் பூரா தெரிஞ்சிருக்கு, இலஞ்சக் கேசிலே அவன் சிக்கிண்டதும், வேலையிலே இருந்து டிஸ்மிஸ் ஆனதும்......

கா:- தெரிஞ்சா என்னவாம்! ஏதோ போறாத வேளை—சோதனைக் காலம்.........அவர் என்ன ஜெயிலுக்கா போயிட்டு வந்தார்...........

## உபதேச காண்டம்

கமலா:- ஏண்டி அம்மா! ஏன் அப்பா உம்னு இருக்கார்...

காமாட்சி:- உம்னு இருப்பார், உர்னு பாயவார், வேற என்ன தெரியும் அவருக்கு......

க:- ஏண்டி சண்டை போட்டே அப்பாவோட...

கா:- சண்டை போடாமே, உங்க அப்பாவோட இலட்சணத்துக்கு சரசமாடுவாளோ...... துப்புக்கெட்ட ஜென்மம்...... என் தலையெழுத்து...

க:- அடுக்கிண்டே போறயே... என்ன விஷயம்னு சொல்லேன்...

கா:- ரொம்ப அவசியமா, தெரிஞ்சுக்கணுமோ...

க:- சொல்லுடின்னா... அம்மா...... சொல்லேன்...

கா:- நேத்துப்பூராச் சொன்னேனேல்லோ, ராமாயண காலட்சேபம் நடத்தச் சொல்லி அந்த முதலியைப் போயிப் பாருன்னு...

க:- ஆமாம் போகலையா...?

கா:- போனாரே! போயி, வெறும் கையோடு வீடு திரும்பி வந்தாச்சி. அவன் சம்மதிக்கலையாம். நாம்தானே சம்மதிக்க வைக்கணும், அதுக்குச் சாமர்த்யம் இருந்தாத்தானே. எங்க அண்ணன் பேரிலே கேஸ் வந்தப்போ, இந்தமாதிரி பித்துக்குளியா நான் இருந்திருந்தேனானா, அண்ணன் இன்னேரம் ஜெயிலிலே தான் இருந்திருப்பார்...

க:- ஆமாம், அடுத்தாத்து பாட்டி கூடச் சொல்றா......நீ தான், கலெக்டரிடம் பேசி, கேசை ஜெயிச்சிண்டு வந்தாயாமே...



கா:- ஜெயிச்சிண்டுவந்தயாமேன்னு, இவ்வளவு சுலபமாச் சொல்லிவிடறயே...அந்த கலெக்டர் கொஞ்சத்திலே மனசு இளகி வழிக்கு வந்தானா. முதல்லே, பொம்மனாட்டிகளைப் பார்க்கற வழக்கமில்லேன்னு, ப்யூனிடம் சொல்லி அனுப்பினான்—நான் வாசப்படியிலே காத்திண்டிருக்கேன்...அம்பா சன்னதிக்குப்போயி, அர்ச்சனை செய்துண்டு பிற்பாடு, போனேன் அவன் பங்களாவுக்கு; ப்யூன் வந்து சொல்றான், தொரை பார்க்கமாட்டாராம், பொம்மனாட்டிகளைப் பார்க்கற வழக்கம் இல்லையாம்னு. அடே அப்பா! நீ போயி தொரையிடம் சொல்லு, எங்களுக்கும் ஆம்பிளைகளைப் பார்க்கற பழக்கம் கிடையாது. ஆனா, இது ஒரு ஆபத்தான விஷயம் அதனாலே தான் வந்திருக்கா ஐயர் வீட்டம்மான்னு சொல்லுடான்னேன். பிற்பாடுதான் உள்ளே போகவே முடிந்தது. நெருப்புப் பொறிபோலப் பேசறான். இலஞ்சம் ருஜு ஆகி விட்டது. சும்மா விடுவதற்கில்லை, அழுது பிரயோஜனமில்லை, அப்படி இப்படின்னு, தாட்பூட்னு குதித்தான்...... பிற்பாடு அவனோடு இதமாப் பேசி,......

க:- தமிழ் தெரியுமோ அவனுக்கு...

கா:- தட்டுத் தடுமாறிப் பேசுவன். ஆசாமிக்கு நல்ல மனசு. முதலிலேதான் கர்ஜித்தான், பிறகு, நான் அவனோடு பக்குவமாப் பேசி, கோபத்தைப் போக்கி, மனசு இளகும்படிச் செய்ததாலே, சரி! உனக்காகச் செய்றேன், என்றான். கேஸ் தள்ளுபடியாச்சு. ஒரு பொம்மனாட்டிக்கு இருக்கற சாமர்த்தியத்திலே நூத்திலே ஒண்ணு இல்லை, உன் தோப்பனாருக்கு......

க:- உன் சாமர்த்தியம் யாருக்கும் வராதுன்னு தான், சகலரும் சொல்றாளே!

## பாடாபிஷேக காண்டம்

ரங்கநாதர்:- என்னமோ பொழுது போக்காப் பேசிகிட்டு இருக்கறானேன்னு பார்த்தா, அந்த ஐயன், தன் வேலையை நம்மிடமே காட்ட ஆரம்பிச்சி விட்டான்......

சங்கரசிவம்:- அப்படிங்களா? என்ன கேட்டான், ஏதாச்சும் கடன், கிடன்......

ரங்க:- அட அது அல்லய்யா. ஊர் ஜனங்க ஞானமில்லாமே கெட்டுப் போறாங்களாம், அதனாலே ஒரு ஆறுமாசம் ராமாயணம் நடத்தணுமாம், செலவுக்கு நான் பணம் தரணும்னு அடிபோட்டான்

சங்கர:- கெட்டிக்காரனச்சே அந்தப் பாப்பான்......



ரங்க:- ஆமாம், நாமஎன்ன கொக்கா! சரி, சரின்னு கேட்டுகிட்டு, ஆமாம் சாமி! நடத்தவேண்டியதுதான்; ராமாயணம், புண்யம்தான்—நான் கூட எங்க கிராமத்திலே பாரதம் நடத்திகிட்டு வர்ரேன், எல்லாச் செலவும் நானேதான் செய்யறேன்னு ஒரு போடுபோட்டேன்........

சங்கர:- பாரதம் நடக்குதுங்களா....

ரங்க:- பாகவதம்நடக்குது...ஆளேப் பாரு! அதான் நமக்கு வேலையா......சும்மா சொல்லி வைச்சேன்யா......சொல்லவேதான், வாயை மூடிகிட்டுப் போனுன்; அடே அப்பா! சர்வ ஜாக்ரதையா இல்லையானு நம்ம தலையிலே, மிளகா அரைச்சிட்டுப் போயிடுவானுகளே. தெரியாமலா பெரியவங்க சொன்னுங்க, பிராமணு-எமகாதகான்னு......

## பனுபஹரண காண்டம்

கமலா:-இவர்தான் ரங்கநாத முதலியார்—எங்க ஊருக்கே பெரிய சீமான் — பூமான்—தர்மவான் ......

ரங்கநாதர்:- ஐயயோ, ரொம்ப அடுக்கிக்கிட்டே போறிங்களே...... உட்காருங்கோ ரெண்டுபேரும் ......ஐயா! கணக்கப் பிள்ளை சங்கரசிவம், ஓடிப்போயி, கலரு வாங்கிட்டு சுருக்கா வா...நீங்க யாரு......"

கமலா:- இவ, என் ஸ்நேகிதி, சமூக சேவகி சாருபாலான்னு......

ரங்க:-தெரியாதுங்களே......சினிமா கினிமா பாக்கற பழக்கம் கிடையாது......

க:- என்ன முதலியாரவாள்! அவசரப்பட்டுப் பேசலாமா,...சாருபாலா, யார் தெரியுமோ...இன்கம்டாக்ஸ் ஆபீசர் கோதண்டராம ஐயரோட பொண்ணு....., அப்படிங்களா....மன்னிச்சுடுங்க,,,,,,

சாரு:- பரவாயில்லடி கமலா! என் டிரசைப் பார்த்து, சினிமா ஸ்டார்னு எண்ணிண்டார் போல இருக்கு...

ரங்:-ஆமாங்க...இல்லிங்க......தப்பு தாங்க...தோப்பனுரு சௌக்யந்தானுங்களே........இந்த ஊரிலே ரொம்ப நல்ல பேருங்க உங்க அப்பாவுக்கு......

சாரு:- இங்கே என்ன! எந்த ஊரிலே அவர் வேலை பார்த்தாலும் அப்படித்தான்...

ரங்:- நெருப்புங்க, தப்பு தண்டா செய்கிறவங்களைக் கண்டா... ஆமா...சில பேர்களுக்கு, அவர் பேரேச் சொன்னலே, சிம்ம சொப்பனந்தான்...

கம:- அப்படித்தான் இருப்பார்...... ஆனு அவரோடமனசு தங்கம் ...அது பழகினுத் தெரியும்... இப்ப, நம்ம சாரு, ஒரு காரியம் ஆரம்பிச்சிருக்கா, சம்பூர்ண ராமாயண காலட்சேபம் நடத்த ஏற்பாடு செய்திருக்கா ......


ரங்:- ரொம்பச் சந்தோஷம்ங்க...... எந்த இடத்திலே, எப்போ, என்னுலே ஆகவேண்டிய காரியம் என்ன, சொல்லுங்க, சங்கோசப்படாம......

கம;- சத் காரியத்துக்குச்சங்கோசப் படுவாளோ! பாருங்கோ, இதிலே நான், என் தோப்பனுருக்கே விரோதமாக் கிளம்பிட்டேன். சாருபலா சொன்னு இந்தக் காலட்சேபம் சிலாக்கியமானதா இருக்க வேணும்னு, சித்ரகூட பாகவதர்தான் வரணும்னு...எங்க தோப்பனுர், இதுக்கு முன்னுலேயே, அவரை இங்கே வரவழைக்க ஏற்பாடு செய்துவிட்டாராம்; பார்த்தேன், சரி அவர் தருகிறதைவிட ஒரு ஐநூறு அதிகம் நாங்க தர்ரோம்னு தந்தி கொடுத்து அவரோட சம்மதத்தை வாங்கியாச்சி......அப்பாவுக்கு முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடிக்கறது......

ரங்:- ரொம்ப சாமர்த்தியமாத்தான் வேலை செய்திருக்கறிங்க...... ஆமாம், ஐயாவுக்கு அதாவது நம்ம இன்கம்டாக்ஸ் ஆபீசருக்கு ராமாயணம் ரொம்ப பிடிக்கும்ங்களா...

கம:- சொல்லேண்டி சாரு! இவ தோப்பனுருக்கு, உயிர், ராமாயணம்னு சொன்னு......வனவாசம் போகிற கட்டத்திலே, கண்ணீர் தாரை தாரையாப் பொழியும்......

ரங்:- எனக்குக் கூடங்க, அந்தக் கட்டத்திலே, கைகேயிமேலே வர்ர கோபம், இவ்வளவு அவ்வளவுன்னு சொல்லி முடியாதுங்க...... ஆபீசரய்யா அடிக்கடி காலட்சேபம் கேட்க வருவாருன்னு சொல்லுங்க......



கம:- வருவாராவா! நீங்க ஒரு பைத்யம் முதலியாரவாள்! ஆரம்ப விழா வைபவமே, அவர்தான் செய்துவைக்கப் போறூர்......

ரங்:- பேஷாப் போச்சு போங்க......

கம:-சீதா கலியாணத்துக்கு யார் வர்ரா சொல்லுங்க பார்ப்போம் .........

ரங்:- யாருங்க......?

கம:- நம்ம ராஜாஜி!

ரங்:- ஆஹாஹா! சிலாக்கியமான ஏற்பாடு! ராமா! ராமா! உன் பெருமையே பெருமை.

கம:- பட்டாபிஷேகத்துக்குத் தான் நாங்க போட்டிருக்கிற பிளான் பலிக்குமோ பலிக்காதோன்னு தெரியல்லே......... உம்மோடே சொல்றதிலே என்ன தப்பு, நம்ம கவர்னர் இருக்காரே......

ரங்:- நம்மகவர்னருங்களா,என்னங்க அவருக்கு......

கம:- அடடா! அவருக்கு ஒண்ணுமில்லே முதலியாரவாள்! அவரைத்தான் பட்டாபிஷேகத்துக்கு அழைக்கிறோம்......

ரங்:- அடா அடா! இதைச் செய்துட்டாப் போதுங்க, நம்ம ஊரே பூரிச்சிப்போகும்......

கம:- செலவுதான் நிறைய ஆகும்... பாருங்க, கன்னையா செட்டியாரிடம் கதை கதையா இதைச் சொன்னேம், அந்தக் கர்மி நூறு ரூபா கொடுத்துவிட்டு, இன்னும் தொந்தரவு கொடுக்காதிங்கன்னு சொல்லிவிட்டான்.

சாரு:- ஏண்டி! கமலா! சிலபேர் கர்மிகளாத்தான் இருப்பா! ராம காரியத்துக்குத் தர மனசு வராது, இன்கம் டாக்சுக்குக் கொட்டிக் கொடுப்பா......

ரங்க:- என்னேட மனசு, பெரிசு...... இப்ப காலம் கொஞ்சம் கஷ்டமானது......

கம:- எல்லோருடைய கஷ்டமும் போறதுக்குத்தானே ராமாயணமே......

ரங்:- ஆமாமாம்!

கம:- பகவானேட காரியத்துக்கு தயக்கமே இருக்கப்படாது.....

ரங்:-சந்தேகமென்னங்க..........ஒரு இரநூறு எழுதிடட்டுங்களா .........

கம:- உங்க இஷ்டம்........

ரங்க: அதிகம் செய்கிறவன்தான்... இப்பகொஞ்சம் தொந்தரவு... எல்லாம் ஆபீசரய்யாவிடம் தான் இருக்கு நம்ம கணக்குப் புத்தகம் ஜாடாவும்......

கம: -ராமனிருக்கார் போங்க உங்க பங்கிலே......ஆபீசர் சத்யசந்தர்.............பக்திமான்களிடம் பொகுப் பிரீதி......மூன்னூறு எழுதுங்க......



ரங்க:- சரிங்க......தடை சொல்வேனுங்களா....கணக்கப்பிள்ளே! மூணு...ஆமாமாம்...உள் அலமாரியிலே......கொண்டு வா... கலர் சாப்பிடுங்க......

★




'அடுத்த வீட்டுக்காரன்; குடித்துவிட்டு ஆடுகிருன்-குழந்தை குட்டிகளைத் தாக்குகிருன்-மனைவியை நையப்புடைக்கிருன் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அவன் வீட்டில் அவன் தன் இஷ்டப்படி செய்துகொள்ள அவனுக்குச் சர்வ சுதந்திரம் உண்டு; அவன் விவகாரத்தில் நாம் தலையிடக்கூடாது; அவனுடைய அந்த நடவடிக்கைக்காக அவனுடன் பகைத்துக்கொள்ளத் தேவையில்லை; அவனும் அவன் இடத்தில் அவனிஷ்டப்படி வாழ அனுமதிப்பதுதான் சிலாக்கியமான கொள்கை-நாம் நமது இடத்தில் நமக்கு உகந்த முறையில் வாழ்வுநடாத்துவோம் என்று இருந்துவிட முடியுமா? இன்று வெகுவாகப் பேசப்பட்டும்; பாராட்டப்பட்டும்; பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் வரும் 'கோ எக்சிஸ்டென்ஸ்' உடனிருத்தல், எனும் கோட்பாடு இது போல இருக்கிறதே!' இதற்கு என்ன பதிலளிக்கிறீர்கள்?'

என்று வம்புக்கார நிருபரொருவர், வாகை மார்பில்புரள, லெனின் கிராடும் மாஸ்கோவும், வார்சாவும், பெல்கிரேடும், வரவேற்பளிக்கும் வைபவத்தில் ஈடுபட்டுள்ள நேரு பண்டிதரைக் கேட்டார்; பண்டிதர் அந்தப் பொல்லாத நிருபரின் கேள்வி கண்டு திகைத்துப்போயிருக்கிருர்!

பெரிய கேள்வி, அடிப்படைக் கேள்வி, ஆனல் என்ன செய்வது அது சரியோ தவருே, அவரவர் அவரவர் வழிப்படி நடந்து கொள்வது எனும் கோட்பாடு வேண்டாமென்ருல், அடுத்த மார்க்கம், யுத்தம்! பயங்கரமான யுத்தம்! முனிதகுலம் போரை விரும்பவில்லை" என்று பதிலளித்திருக்கிருர்.

இலட்சிய மணம் கமழும் பதில்—சந்தேகமில்லை. ஆனல் நிருபரின் கேள்விக்குச் சரியான, நேரடியான பதில் அல்ல, அது பண்டிதருக்கும் தெரியும்.

காட்டில் உள்ள புலி, நாட்டுக்குள் நுழையாதிருக்கும் வரையில், நாமாக வலியச் சென்று, வேட்டையாட வேண்டியதில்லை, வேட்டை என்று சென்ருல், புலியை நாம் கொல்கிருேமோ, நம்மைப் புலி கொல்கிறதோ, யார் கண்டார்கள். புலி, அதன் எல்லையில் இருந்து போகட்டும்; புள்ளிமானைக் கொன்று இரத்தம் குடிக்கிறதா, நமக்கென்ன, அதன் சுபாவம் அது நாம் நமது இடத்தில் இருந்து வருவோம்—நமது சுபாவத்தின்படி நடந்துகொள்வோம்—என்ற போக்கிலே இன்று, சோவியத்தும் சரி, அமெரிககாவும் சரி இறங்கி விட்டிருக்கிறது. அந்தப்போக்கு, தத்துவார்த்தத்தை மட்டும் ஆய்ந்துபார்ப்போருக்கு தவருனதாக, நெடுங்காலத்துக்கு நிலைத்திருக்க முடியாததாகத் தோன்றும் ஆனல் உலகைப் பிடித்து உலுக்கி வந்த 'யுத்தபயம்' இதனல் பெரும் அளவுக்குக் குறைந்துவிட்டது என்பதைப் பார்க்கும்போது, இந்தப் போக்கை, எவரும் போற்றத்தான் செய்வர்.

சோவியத் நாடு எப்போது எந்த நாட்டின் மீது பாயலாம்; எந்த நாட்டிலே எத்தகைய பலாத்காரத்தை மூட்டிவிடலாம் என்று திட்டம் தீட்டிய வண்ணமிருக்கிறது என்று கலகமூட்டிவந்த வல்லரசுகள், இன்று சோவியத்

நாட்டின் புன்னகையைக் கண்டு பெரும் பீதி அடைந்துள்ளன,

ஆஸ்திரியாவுக்குச் சுதந்திரம்' ஜெர்மனிக்குப் புது வாழ்வு, யுகோ நாட்டுடன் நேசம், நால்வர் மாநாட்டில் கலந்துகொள்ள இசைவு அளித்தல், ஐக்யநாடுகள் சபை விழாவில் கலந்து மகிழ்வளித்தல், ஈரானுக்குச் சொந்தமான தங்கப் பாளங்களைத் திருப்பித்தருவது, அமெரிக்கரை அத்துமீறித் தாக்கியதற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்வது, என்று, சரமாரியாக சமரசக் கணைகளை வீசுகிறது. சோவியத், நேருபண்டிதரை வரவழைத்து வைபவம் நடத்தியதுடன் நிற்கவில்லை, நிச்சயமாக அமெரிக்காவின் ஏஜண்டு என்று தெரிந்திருந்தும், அடினருக்கு அன்பழைப்பு விடுத்திருக்கிறது. அமெரிக்கத் தலைவர்களையும் அழைக்கிறது. பாகிஸ்தான் முதல்வருக்கும் 'சான்சு'தான் என்கிறார்கள்,

மாலடோவ் சிரித்துப் பேசியதைக் கண்டதில்லை என்று கூறிவந்தார்கள்—இப்போது அவர், வல்லரசு மாநாட்டுத் தலைவர்கள் பாடம் பெறத்தக்க வகையில் நகைச்சுவை மன்னராகியிருக்கிறார். ரஷியாவில் அமெரிக்க சுதந்திரதின விழா விருந்திலே கலந்துகொண்டு, அமெரிக்க மக்களுக்கும், தலைவர்களுக்கும் முகமன் கூறுகிறார்!

சோவியத் நாட்டின் நாடி முறுக்கு தளர்ந்துவிட்டது, அதன் தலைவர்கள் திக்கு ஒருவராக இருக்கிறார்கள்; திகில் கொண்ட நிலையில் இருக்கிறார்கள், எனவேதான், இவ்வளவு கனிமொழியும் காதலையும் பொழிகிறார்கள், என்று குத்திவிட்டு வேடிக்கை பார்க்கும் குருட்டுச் சாமிகள் குறைகூறிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், சோவியத் தலைவர்கள், இப்படி எண்ணுபவர்களின் அறிவீனத்தை இடித்துரைத்திருக்கிறார்கள்,

எப்படி இந்தப் போக்கு சாத்யமாயிற்று! உலக அதிசயத்தில் ஒன்றாக இருக்கிறதே, இதற்கு முன்பு இதுபோல நடந்ததுண்டா என்று கேட்பவர்கள், முக்கியமான சில நிகழ்ச்சிகளை மறந்துவிடுகிறார்கள்,

பிரிட்டன் ஏகாதிபத்ய வெறிபிடித்த நாடு, அமெரிக்கா முதலாளித்வ முகாம் என்பது தெரிந்திருந்தும், சென்ற யுத்தத்தின் போது, ஸ்டாலின், அந்த நாடுகளுடன் ஒத்துழைத்துப் பணிபுரிந்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தினாலும், அமெரிக்க முதலாளித்துவத்தினாலும் விளையக் கூடிய ஆபத்தைவிட அதிக விபரீதமான ஆபத்து, நாஜிசத்தால் ஏற்படும், உலகிலே நாஜிசம் இருக்க இடமளிக்கக் கூடாது என்ற உயரிய இலட்சியத்துக்காக ஒன்று கூடினர்.

இன்று, உலகை மிரட்டிவரும் போர், சாமன்யமான நாசம் விளைவிக்கக் கூடியதல்ல—மனித குலமே அழிந்துபடும் என்று மதியும் மனிதாபிமானமும் கொண்ட விஞ்ஞான வித்தகர்களே எச்சரித்துள்ளனர். எனவே உலகுக்கு இந்தப் பேராபத்து ஏற்படக் கூடாது என்பதற்காகவே, சமரசத்தை மலரச்செய்திருக்கிறது சோவியத்.

சோவியத் நாட்டின்மீது சுடுசொல் வீசி, எப்படியாவது, அது முறண்டிக் கொண்டு போகும்படிச் செய்துவிட முயல்பவர்கள், இருக்கத்தான் செய்கிறார்கள்.

உலகு முழுவதும் பொது உடைமை மலரவேண்டும்; அதற்கான வழி வகை கூறவும், ஆதரவு நல்கவும் ஓர் அமைப்பு உண்டு, அதுவே காமின்பார்ம் என்பது. இந்த மாஸ்கோ முகாமைக் கலைத்துவிட்டாலொழிய, சோவியத்தின் சமரசப் பேச்சை முழுவதும் நம்புவதற்கில்லை என்று, பாண்டுங் மாநாட்டில், ஈராக் நாட்டுத்தலைவர் ஜமாலியும், கொத்தலாவலையும் குரல் எழுப்பினர்; பண்டிதர் இவ்வளவு பச்சையாகப் பேசவில்லை என்றபோதிலும். ஜாடைமாடையாகச் சுட்டிக்காட்டத்தான் செய்தார்.

காமின்பர்ரம் கலைக்கப்படவேண்டும், என்று வற்புறுத்தினால், அது ஒன்றுமட்டும் முடியாது என்று திட்டவட்டமாக சோவியத் கூறிவிட்டது, சமரசத்தை முறித்துக் கொள்ளும் என்று மனப்பால் குடிக்கிறார்கள். சென்ற கால நிகழ்ச்சி பற்றிக் கணிக்காததாலேயே, இவ்விதம் எண்ணுகிறார்கள்.

**காமின்பாரம் கலைக்கப்பட்டால்தான், உலகில் சமாதானம் நிலைக்கும். சமரச மணம் கமழும் என்று உணர்த்தப்பட்டால், சோவியத் காமின் பாரத்தைக் கலைப்பதற்கும் இணங்கும்.**

இன்றைய **காமின்பார்ம்** முன்னைய **காமின்டர்ன்** அமைப்பின் மறு பதிப்புதானே. காமின்டர்னுக்கு வித்து **முதல் அகிலம்.** இந்த முதல் அகிலம் எனும் சர்வதேச பாட்டாளிகளின் பாசறை *1865*-ல் ஜெனிவாவில் நடைபெற்ற மாநாட்டில் உருவெடுத்தது. **மாஸ்கோ** இதற்கு சட்டத் திட்டம் வகுத்தளித்தார். ஆனால் அவருடைய மனம் மகிழும் முறையில் முதல் அகிலம் நடந்துகொள்ளவில்லை. முதல் அகிலம் ஐரோப்பிய நாடுகளிலே நடமாடி, பல்வேறு எதிர்ப்புகளைத் தாங்கித் தவித்து, அமெரிக்காவில் நியுயார்க் நகரில் நுழைந்து, *1876*-ல் கலைக்கப்பட்டுவிட்டது.

பதின்மூன்றாண்டுகளுக்குப் பிறகு, மார்க்சின் கொள்கைகளின் மீது கட்டப்பட்ட **இரண்டாவது அகிலம்** பணியாற்றத் தொடங்கிற்று. இது தட்டித் தடுமாறி வேலை செய்து வந்தது, இதனிடம் புரட்சி மனோபாவம் இல்லை என்று கண்ட **லெனின்** *1919*-ல் மூன்றாவது முயற்சியாக, **காமின்டர்ன்** அமைத்தார்.

சோவியத் பொதுஉடைமை ஆட்சி நிலைத்திருக்க, வேண்டுமானால், உலகு எங்கும் பொது உடைமை பரவியாகவேண்டும், அதற்கான முயற்சியில் சோவியத் ஈடுபட்டாகவேண்டும் என்பது காமின்டர்ன் கோட்பாடு. இது, சாத்தியமில்லை, என்பது ஸ்டாலினுக்குச் சித்தாந்தமாயிற்று—டிராட்ஸ்கி, இதை விடாப்பிடியாகக் கொண்டிருந்தார். இதன் பயனாக டிராட்ஸ்கி வேட்டையாடப்பட்டார்.

இந்த **காமின்டர்ன்** உலகில் எங்கெங்கு கம்யூனிஸ்டு முயற்சி தோன்றினாலும், உதவி அளிக்கும், பாசறையாக இருந்து வருவதைச் சுட்டிக்காட்டி, இது கலைக்கப்பட்டால்தான், நாஜிசத்தை எதிர்த்து நடத்தப்படும் போரில் வெற்றி காணமுடியும் என்று நேசநாடுகளின் சார்பில், பிரிட்டனும் அமெரிக்காவும் வலியுறுத்தியபோது, **ஸ்டாலின், 1943, மே-22-ல் காமின்டர்னைக் கலைத்துவிட்டார்.**

*1947*, செப்டம்பரில்தான், **காமின்பார்ம்** அமைக்கப்பட்டது.

ஸ்டாலின் காலத்தில் காமின்டர்ன் கலைக்கப்பட்டது—காரணம், பெரும் போரில் வெற்றிகாண.

புல்கானின் காலத்தில், சமாதானத்துக்காக எடுத்துக்கொள்ளப்படும் புனிதமான நடவடிக்கை வெற்றி பெறுவதற்காக, **காமின்பார்ம்** கலைக்கப்படலாம். சோவியத் தலைவர்கள் —வீம்புக்கும் விருப்புக்கும் வீணாக இடமளிக்கமாட்டார்கள். ★

# நாஸ்தீகராகிறார்!

"ஏராளமான பணம் செலவுசெய்து புதிது புதிதாகக் கோயில் கட்டவேண்டிய அவசியமில்லை. நாட்டில் பரவிக் கிடக்கும் திருக்கோவில்களைச் செப்பனிட்டு அங்கு பக்தியை வளர்த்து ஜனங்களை வழிபாடு செய்யத் தூண்டினாலே போதும். கோவில் கட்டுவதற்குப் பதிலாக அப்பணத்தைக் கல்வி நிலையங்கள், வைத்ய சாலைகள் கட்ட உபயோகிப்பது பிரயோஜனகரமாயிருக்கும்" நெல்லையில் ஜூன் 20ல் குன்றக்குடி அடிகளார் இதுபோலக் கூறினார்! இதுபோன்ற கருத்துக்களைக் கூறுவதாலேதான், சுயமரியாதைக்காரர்களை நாஸ்தீகர்கள் என்று வைதீகர்கள் நிந்திக்கிறார்கள். இப்போது வைதீக வட்டாரத்து ரட்சகர் என்று வரவேற்கப்பட்டு, வாழ்த்தப்படும், குன்றக்குடி அடிகளாரே, இதுபோலப் பேசுகிறார்! சித்திர கூடத்தில், வெல்வெட்டுமெத்தையில்சாய்ந்துகொண்டு வெள்ளி வட்டிலில் கனிரசம் ஊற்றி அன்பு குலுங்கும் அடியார்கள் தரப் பருகி, 'உபதேசம்' செய்யும் முறையில் இதுபோலப் பேசத் தோன்றாது. "எதையும் ஈசனுக்குத்தா அப்பனே! எல்லாம் ஈசனுக்கே!" என்று உபதேசம் இருக்கும். உபதேசம் கேட்க வருபவர்களோ, சீமான்கள், சீமாட்டிகள். குன்றக்குடி அடிகள் பொதுக் கூட்டங்களிலல்லவா பேசுகிறார்! அங்கு அவர் காணும் மக்களின் கண்களிலே கப்பிக்கொண்டிருக்கும் கவலை அவருக்குப் புதுப்பாடம் கற்பிக்கிறது. உபதேசியார், நாஸ்தீகராகிறார்!!

# இதயம்-இலாபம்!

அவதிகள் படும் அல்லலைக் கண்டு ஆந்திர அமைச்சர் அவைத் தலைவர் கோபால ரெட்டியாருக்கு அன்புப் பெருக்கெடுத் திருக்கிறது; அவர்களை ஆதரிக்கும் நோக்குடன் திட்டம் தந்திருக்கிறார். இலட்சம் அகதிகள், கிழக்கு வங்கத்திலிருந்து வருகிறார்களாம், அவர்கள், ஆந்திரத்தில் குடி ஏற இடமளிக்கிறார் கோபால ரெட்டியார்! இப்படி அல்லவா இதயமிருக்க வேண்டும் என்பீர்கள்—இதிலே இதயம் மட்டுமல்ல, வியாபாரமும் இருக்கிறது! அகதிகள் குடிஏற அவர் காட்டும் இடம், சீகாகுளம் வட்டாரம்! பெருங் காடுகளும், சிறு குன்றுகளும் நிரம்பிய இடம்! பாதை கிடையாது; பாங்கு கிடையாது. இங்கு நல்ல பாதைகள் அமைத்து, சாலைகள் அமைத்து, சிற்றூர்கள் உண்டாக்கி, அகதிகள் குடி ஏறவேண்டும். இதற்கு கோபால ரெட்டியார் சம்மதமளித்திருக்கிறார். செலவு ஏராளமாகும்! அந்தச் செலவு, மத்திய சர்க்கார் செய்யவேண்டும், கிழக்கு வங்கமும் தன் பங்கினைச் செலுத்தட்டும் என்கிறார் கோபாலர்! எப்படி இருக்கிறது அவருடைய வியாபார தந்திரம்! பல கோடி ரூபாய் செலவிட்டு, ஆந்திரப் பகுதியில், காடு நாடாக்கப்பட வேண்டும்!! அன்புதான் காரணம், அகதிகளிடம்!! வடநாட்டுக்காரர்களிடம் எப்படிக் கறக்கவேண்டும் என்கிற வித்தை தெரிந்திருக்கிறது இவருக்கு! இவருக்கு இதாவது தெரிந்திருக்கிறது—இங்கு நமக்கு வந்து வாய்த்துள்ள ஆளவந்தார்களுக்கோ வடநாடு தென்னாடு என்று பேசாதீர், அது தீது, ஆகாது, எங்கள் செவி அதைத் தாங்காது, என்று பேசத்தான் தெரிகிறது! அகதிகளைத்தானே காப்பாற்றவேண்டும், இதோ நான் இடமளிக்கத் தயார், இடத்தைத் தயாரிக்க பணம்கொடுக்கத்தயாராகுங்கள் என்று கேட்கிறார், கோபால ரெட்டியார்! பிழைக்கத் தெரிந்தவர்! இங்கு, போடு என்பதற்குள், எண்ணிக் கணக்குப் பார்த்துக்கொள் என்றல்லவாசொல்பவர்கள்ஆள்கிறார்கள்!




# நாட்டுக்குத் தேவை

"நமது ஜனத்தொகையில் 80-சதவிகிதத்தினர் கிராமவாசிகள். அவர்களுக்கு உருப்படியான எதையாவது செய்யவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்குக் காணப்படும் பதில் அவ்வளவு வெளிப்படையாக இல்லை"

"பெண் சிகப்புநிறம் என்கிறீரே, பார்த்தால் அப்படித் தெரியக் காணோமே — மாநிறமாக இருக்கும் போல் தெரிகிறதே—கருப்புநிறம் என்று கூடச்சொல்லலாம் போலிருக்கிறதே" என்று கூறும் சங்கோஜப் பேர்வழியின் பேச்சு போலிருக்கிறதல்லவா! சொன்னவர் சங்கோஜத்தால் அவ்விதம் பேசவில்லை; அதைவிட வெளிப்படையாகப் பேசமுடியாது! காரணம் அவர் ஒரு ஜில்லா கலெக்டர்!

சென்னை சர்க்கார் காரியாலயக் கட்டடத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றிய ஆய்வுரை ஜூன் 24-ந் நாள் நடைபெற்றபோது செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் லோபோ பிரபு இவ்விதம் பேசி இருக்கிறார்.

சர்க்காரின் திட்டங்களிலே இவருக்கு அக்கரையோஆர்வமோ இல்லை, ஆகவேதான் இவ்விதம் 'இடுப்பொடிக்கும்' விதமாகப் பேசுகிறார், என்றும் கூறிவிட முடியாது. செங்கற்பட்டு மாவட்டத்தில் பல சிற்றூர்களிலே இவர் மாணவர் முகாம்கள் நடத்தி, கிராமப் புனருத்தாரணம் செய்திருக்கிறார்—சர்க்காரின் திட்டத்தை ஒட்டி—இதைக் காண காமராஜர் அவர்களையும் அழைத்திருந்தார். எனவே இவர் அக்கரையற்றுப் பேசுபவர், அல்ல என்பதை ஒப்புக்கொள்வர்; ஆனால் ஆய்வுரை நடைபெறும்போது உண்மையைக் கூறித் தீரவேண்டி நேரிட்டது, அதையும் நாசுக்காகவே கூறியிருக்கிறார். இதைப் பாமரமக்களின் பாணியில் மாற்றி அமைத்தால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராம மக்களுக்கு உருப்படியான ஒரு நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்று ஆகிறது. ஆனால் கலெக்டர் அவ்விதம் பேசலாமா! ஆகவேதான், 'ஜாடை'யாகக் குறிப்பிட்டிருக்கிறார். இதற்கே பிரத்யேகத் துணிவு வேண்டும்—லோபோ பிரபுவுக்கு இந்தத் துணிவு இருப்பது கண்டு மகிழத்தான் வேண்டும். ஆமாம்—ஆஹா!—அற்புதம் — அது சரி—என்று பேசி, மந்திரிமார்களை மகிழச் செய்வதைவிட, திட்டங்களில் உள்ள குறைபாடுகளைத் துணிவுடன் எடுத்துக் காட்டிடும் அதிகாரிகள் தான், நாட்டுக்குத் தேவை!

Edited, Printed & Published by C N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St, Kancheepuram.